Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12957) விநாயகர் வீதி, மயில்வட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி–25 | 11–10–2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை–236

## 2ஆம் லெப். மாலதி நினைவு நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு!

### உருவப்பட பவனிகள், பொதுக்கூட்டங்கள்

தாயக விடுதலைப்போரில் வீரச்சாவடைந்த முதல் பெண்மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளும் தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகளும் நேற்று தமிழீழ மெங்கும் உணர்வெழுச்சி யுடன் நடைபெற்றன.

தமிழீழமெங்கும் மாவட்ட ரீதியாக அஞ்சலி மற்றும் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன. 2ஆம் லெப்.மாலதியின உருவப்பட ஊர்வலங்களுடன் மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகி பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. இவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளம் பகுதியில் இந்நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

பிற்பகல் 4.00 மணியளவில் ஆண்டான்குளம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு அண்மையில் ஆரம்பமான பேரணியானது 2ஆம்லெப்.மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியினைத் (12 ஆம் பக்கம் பார்க்க)



# மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அனைத்து துணைப்படைகளும் கலைக்கப்பட்டு விட்டன!



## இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட

(கொழும்பு)

***சிறிலங்காவின் அனைத்துத் துணைப்படைகளும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கலைக்கப்பட்டு விட்டன என்று சிறிலங்கா இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.***

சிறிலங்கா இராணுவத்தின் 56ஆம ஆண்டு நிகழ்வையொட்டி இராணுவ தலைமையக நிகழ்ச்சியில் சாந்த கொட்டேகொட நேற்றுப் பங்கேற்ற பின்னர் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். கருணா குழுவினருக்குப்பின்னால் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறை இயங்கி வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம்சாட்டி வருவதை ஏற்க முடியாது மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒஸ்லோ பேச்சுக்களின் அடிப்படையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து அனைத்து துணைப் படைகளும் களையப்பட்டு விட்டன. நாட்டில் அமைதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுடன் மகிந்த நான்கு மணி நேரம் ஆலோசனை

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சுதந்திரக்கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை சந்தித்தார்.

சந்திரிகாவின் இல்லத்தில் இரவு 8மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்ற சந்திப்பில் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன, பிரதமரின் துணைவியார் கிரந்தி ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டதாக சனாதிபதிசெயலக வட்டாரங்கள் தெரிவித்தன. யுனஸ்கோ கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரான்ஸ் சென்றிருந்த சந்திரிகா கடந்த சனிக்கிழமை அதிகாலை நாடுதிரும்பினார். பின்னர் இச்சந்திப்பினை சந்திரிகா ஏற்படுத்திகொண்டார். மகிந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டம் பொத்துவில் நகரில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பொத்துவில் பிரதேச அமைப்பாளரான அபூபக்கர் சஹாப்தீன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலோசனை

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் நாளை புதன்கிழமை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க ஆலோசனை நடத்தவுள்ளார்.

வேட்பு மனுத்தாக்கலின் பின்னர் வேட்பாளர்களை தேர்தல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தை வீட்டிற்கு அனுப்பவேண்டும் என்பவர் யாரை வைத்து யுத்தம் புரியப்போகிறார்?

### - சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுரா கேள்வி

(கொழும்பு)

இன்று சிலர் கூறுகின்றனர் யுத்தத்திற்குச் செல்லவேண்டுமென. அவர்களே கூறுகின்றனர் இராணுவத்தின் சீருடைகளைக் கழற்றி வீடுகளுக்கு அனுப்பவேண்டுமென. இப்பொழுது யுத்தம் ஏற்பட்டால் என்ன நடக்கும் அப்படியானால் யார் மோதிக் கொள்ளப்போகிறார்கள். இவ்வாறு கேள்விஎழுப்பினார் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுராபண்டாரநாயக்க.

ஊடகவியலாளரைச்சந்தித்துப்பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுதந்திரத்திற்குப் பின்னர் எனது தந்தையும் தாயும் சகோதரியும் இந்த நாட்டின் இராணுவத்தின் தரப்பில் பத்தொன்பது வருடங்கள் செயற்பட்டுள்ளோம். ஒருபோதும் இராணுவத்தைச் சோர்வடையச் செய்கின்ற-இராணுவத்தைச் சந்தேகமடையச் செய்கின்ற விதத்தில் நாம் செயற்படவில்லை.

அரசாங்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த நாட்டின் இராணுவத்தினருக்கு வழங்கக் கூடிய அதிகபட்ச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தோம். இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது இராணுவமே.

இந்நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளின்போது இந்நாட்டின் சனநாயகத்தைப் பாதுகாத்தது இராணுவமே.

இந்த உலகத்தில் இராணுவம் இல்லாத நாடு இல்லை. அவ்வாறு கூறிய அந்த நபரை நான் கேட்கின்றேன். நான் பெயர் குறிப்பிடவிரும்பவில்லை. அந்த நபரிடம் கேட்கின்

(12 ஆம் பக்கம் பார்க்க)



### -தமது திட்டங்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக-

## உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் விடுதலைப்புலிகளுக்கு நன்றி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வடக்குக்கிழக்கில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வேலைத்திட்டங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வழங்கி வரும் ஒத்துழைப்பிற்கு உலகஉணவுத்திட்டத் தலைமையகப் பணிப்பாளர் போல்கைற்றிகிரிஸ் றோபசன் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை உலக உணவுத் திட்டத்தின் ரோம் தலைமையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் போல்ஸ் கைற்றிகிரிஸ்றோபசன் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

முற்பகலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

7 ஆம் வட்டாரம், சிவநகர், புதுக்குடியிருப்பு பொக்கணை வீதியில் அமைந்துள்ள தென்னைபிரயோசனங்களுடன் கூடிய 1/4 ஏக்கர் அளவு காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி செ. பாலன்,ராஜ் அழகம், முல்லைத் தீவு வீதி,புதுக்குடியிருப்பு. (6622)

### காணவில்லை

மா.வெள்ளை K.K.R எருது ஒன்றும் மா. வெள்ளை கோழிக்கால் R.B. நாம்பன் என்பன 19.09.2005இல் இருந்து காணவில்லை. இது பற்றித் தெரிந்தவர்கள் கீழ் கண்டமுகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். இ.பாலசுப்பிரமணியம் இல. 54, கணேசபுரம் ,கிளிநொச்சி. (சி-6832)

### பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்

2005,2006ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி படிவங்களை அனைத்து அறிவமுது பொத்தகசாலையிலும் பெறலாம். (6418)

### கணினி கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மல்லாவி இளையோர் திறன் விருத்தி நிறுவனத்தின் கணினிப் பயிற்சி நிலையத்தின் பெரியோர்களுக்கான கணினிப்பயிற்சி பாட கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே கணினிப்பயிற்சி பாடநெறியினைக் கற்க விரும்புபவர்கள் தங்களுக்கான விண்ணப்பப்படிவங்களை கணிணிப்பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். தங்களுக்கான நேர்முகத்தேர்வுகள் நாளை காலை 10.00 மணிக்கு கணினிப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### மல்லாவி நுண்கலைக்கல்லூரியின் ஓவியப்போட்டி முடிவுகள்

தியாக தீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வையொட்டி மல்லாவி நுண்கலைக் கல்லூரியினரால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளது.

**பிரிவு - 01**

முதலாம் இடம்:அ.கஜன் மு/மல்லாவி மத்தியகல்லூரி. இரண்டாம் இடம்: ஜெ.ஜெனார்த்'தகன் மு/யோகபுரம் மகாவித்தியாலயம்.மூன்றாம் இடம்: மா.சசிக்குமார் மு/முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை.

**பிரிவு - 02**

முதலாம் இடம்: அ.சோமேஸ்ராஜா மு/முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை

இரண்டாம் இடம்: தி. சதீஸ் மு/முத்துஐயன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை.

மூன்றாம் இடம்: ந.பிரதீபன் மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திரு. திருமதி. சிவசோதி தம்பதிகளின் முத்துமுதல்வியான

**கனிமொழி**

தனது முதலாவது பிறந்த நாளினை 11. 10. 2005 இன்று விசுவமடு அதிசய விநாயகர் ஆலய வீதியில் உள்ள தனது வீட்டில் கொண்டாடுகின்றார்.

இவ்வேளை கனிமொழியை திரியாய் பிள்ளையார் துணையுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர் அப்பப்பா,அம்மம்மா
சித்தப்பாமார்,
திரியாய் திருகோணமலை.

(6834)

## ADVANCED FIELD OFFICER for FOOD SECURITY DEVELOPMENT PROGRAMS (JAFFNA)

Action contre la faim is an international NGO involved in humanitarian activities in Srilanka since 1997 Current activities are based in Ampara, Batticaloa, jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years we require in jaffna services of a woman as advanced field officer (AFO)

This position is suitable for an economist or an agriculturalist who has strong experience of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

The woman will be in charge of development programmes mainly in the islands with a targeted gender approach (intiatives with women s group widows) She will manage the collection and analysis of livelihood data the reporting and occasionally the representation at technical meetings in Jaffna She will join a team of 2 AFO s(junior and senior) and will work under the responsibility of the Food Security program Manager in Jaffna

Applicants must be charismattic good in team management fluent in English and able to do conversation in Tamil. Computer literacy especeiall7y MS Word and Excel is required.

Category: Senior position
Duratiopn: Iyear with insurance coverage
Apply within as soon as possible
ACF Food Security jop Vacancy
NO 40 Racca Lane
Chundilkuli
Jaffna
T.P 0212222465/0212222465

(சி-13024)

## சாவு அறிவித்தல்

### திரு. சீனியர்- பொன்ராசா

பலாலிவடக்கு பலாலியை சொந்த இடமாகவும் தேராவில் தெற்கு தேராவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் பொன்ராசா 10.10.2005 (நேற்று) திங்கட்கிழமை காலமானார். அன்னார் சீனியர் பவளம் தம்பதியினரின் அன்பு மகனும், தவமணியின் அன்புக் கணவரும், தியாகராஜா (கனடா), தேவராஜா (ஜேர்மனி), செல்வராசா (சுவிஸ்), தவராசா (ஜேர்மன்), சறோஜ் தேவி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், தனுராஜ், பகீரதன் (மனோ) ஆகியோரின் அன்பு தந்தையாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
மனைவி பொ.தவமணி
பிள்ளைகள் - பொ.தனுராஜ்
பொ. பகீரதன் (மனோ)

(6623)

## அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

விழுமிய மாற்றங்களை உருவாக்காத கல்வி யாருக்காக?

எமது மண்ணுக்கான கல்வியை கண்டடைதல்

## கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் கல்வி நிதிய வளர்ச்சிக்காக



### முத்தமிழ் அரங்கம் நடன, நாடக இசை நிகழ்ச்சி

காலம் :-15-10-2005 (சனிக்கிழமை) இடம் :- பண்பாட்டு மண்டபம் கிளிநொச்சி
முதலாவது காட்சி பிற்பகல் 2.00 மணி
கட்டணம் :- ரூபா 100/=
இரண்டாவது காட்சி மாலை 7.00 மணி
கட்டணம் :- ரூபா 200/=,500/=,1000/=
ரிக்கற் மண்டப வாசலில்....
கல்வி நிதிய வளர்ச்சிக்காக தங்களின் ஆதரவினை வேண்டுகிறோம்



விளம்பர அனுசரணை | பிள்ளையார் மருந்தகம் (அகிலன்ஸ்) | பிரதான வீதி, கிளிநொச்சி.

(சி-13057)

# பாகிஸ்தானுக்கு உலக நாடுகளின் உதவி குவிகிறது

# அமெரிக்கா உலங்குவானூர்திகளை அனுப்பியது

(வோஷிங்டன்)

**பூமி அதிர்ச்சியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு உலக நாடுகளின் உதவிகுவிகிறது. அமெரிக்கா அவசர கால உதவியாக ஒரு கோடி ரூபாவையும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவ உலங்குவானூர்திகளையும் அனுப்பிவைத்துள்ளது.**

அமெரிக்க சனாதிபதி புஷ் பூமி அதிர்ச்சியால் ஏற்பட்ட உயிரிழப்புக் குறித்து அதிர்ச்சியையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் உதவி தேவைப்பட்டால் அதையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக புஷ் கூறியுள்ளார்.

அவசரகால உதவியாக ஒரு கோடி ரூபாய் அளிப்பதாகவும் மீட்புப் பணிகளில் ஈடுபட இராணுவ உலங்குவானூர்திகளை வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அரசு மீட்புக் குழுவினரையும், மீட்புப்பணி நிபுணர்களையும், மோப்பநாய்களையும் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ளது. முதல் விமானத்தில் அவர்களுடன் போர்வைகள் போன்ற உதவிப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு இரண்டாவது விமானம் நொட்டிங் ஹாம் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது.

மருத்துவக் குழுக்களை அனுப்பி உதவும் படி ஜப்பானை பாகிஸ்தான் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 50 மருத்துவப்பணியாளர்களை ஜப்பான் அனுப்பியுள்ளது.இது தவிர ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு கூரை விரிப்புப்பொருட்கள் போர்வைகள் போன்றவற்றையும் நிவாரணப்பணியாளர்களையும் அனுப்பியுள்ளது.

துருக்கி இரண்டு இராணுவ விமானங்களில் 30 வைத்தியர்கள் 21 மீட்புப் பணியாளர்கள் இரண்டு அம்பியூலன்ஸ்கள் ஒரு போக்குவரத்து வாகனம் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளது.

மேலும் மூன்று விமானங்களில் உதவிப் பொருட்களை ஏற்றி அனுப்பும்படி செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா உடனடியாக இரண்டு கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,சவூதி அரேபியா ஆகிய நாடுகளும் நிவாரணப் பொருட்களையும், மீட்புக் குழு வினரையும் அனுப்பியுள்ளது.

கனடா ஒரு கோடி ரூபாயை அவசரகால உதவித் தொகையாக அளித்துள்ளது.

பூமி அதிர்ச்சியால் ஏற்பட்ட உயிரிழப்பை அறிந்து தன் அதிர்ச்சியையும் துக்கத்தையும் கனடா பிரதமர் பால்மார்ட்டின் தெரிவித்துக் கொண்டார்.

பங்களாதேஷ் சனாதிபதி இஜாஜ்தின் அகமது, பிரதமர் கலிதாஜியா ஆகியோர் பூகம்பம் பற்றி அதிர்ச்சியடைந்ததாகவும் பலியானவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புக்கு அனுதாபச் செய்தியும் அனுப்பியுள்ளனர்.



இஸ்லாமபாத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



பாகிஸ்தானில் நிவாரணப்பணியில் ஈடுபட்டுள்ள துருக்கி இராணுவம்

## 36 மணி நேரத்தின் பின் ஒருவர் உயிருடன் மீட்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்திலும் பூகம்பம் ஏற்பட்டதையடுத்து கட்டடங்கள் சரிந்து விழுந்தன. இதனால் தீவிர மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் பூகம்பம் ஏற்பட்டு 36 மணி நேரத்திற்குப் பின்னர் அடுக்குமாடிக் குடியிருப்பில் இடிபாடுகளில் சிக்கியிருந்த 20 வயது இளைஞர் உயிருடன் அதிர்ஷ்டவசமாக மீட்கப்பட்டுள்ளார்.

## பாகிஸ்தானில் தேசிய துக்க தினம்

பூகம்பத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பாகிஸ்தானில் நேற்று முன்தினம் முதல் மூன்று நாட்கள் தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அப்தாப் ஷெர்பாவோ நிருபர்களிடம் தெரிவித்தார்.

யாரும் கற்பனை செய்ய முடியாத அளவுக்குப் பேரழிவு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு மணி நேரத்திலும் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அவர் கூறினார்.



இஸ்லாமபாத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களைத் தெருக்களில் வரிசையாக அடுக்கி வைத்துள்ளனர்.

## பூகம்பத்தால் மயானமாக மாறிய நகரங்கள்

## உயிர் தப்பியவர்களையும் வேதனை வாட்டுகிறது



(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் பூகம்பத்தால் பல நகரங்கள் மயானமாக மாறி விட்டன. அடுத்தடுத்து தாக்கிய நில அதிர்வுகள், உயிர் தப்பியவர்களையும் வேதனையில் ஆழ்த்தி வருகின்றது.

பாகிஸ்தானைத் தாக்கிய பூகம்பத்தை அடுத்து பெய்த பலத்த மழை, நிலச்சரிவு மீண்டும் மீண்டும் ஏற்பட்ட நில நடுக்கத்தால் மீட்புப் பணியில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தோண்டத் தோண்ட பிணங்கள் வந்து கொண்டே இருப்பதால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள பல நகரங்களும், கிராமங்களும், மயானமாக மாறி விட்டன. நிலநடுக்கம் ஏற்படும் போதெல்லாம் பீதியடைந்த மக்கள் குரான் வாசகங்களை ஓதினார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்புப் பணியில் இராணுவத்தினருக்கு உதவியாக பொது மக்களும் ஈடுபட்டனர். வெறும் கைகளால் அவர்கள் இடிபாடுகளை அகற்றிப் பிணங்களை வெளியே எடுத்தனர்.

இரவு முழுவதும் பெய்த மழை நேற்று முன்தினம் காலை சற்று ஓய்ந்ததும் மீட்புப் பணி சுறுசுறுப்படைந்தது. நிவாரணப் பொருட்கள் உலங்குவானூர்தி மூலம் தேவையான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

சில குக்கிராமங்களுக்கு மீட்புக் குழுவினர் செல்ல முடியாத அளவுக்கு மலைச் சரிவினால் போக்குவரத்து தடைப்பட்டு விட்டது. உறவினர்களைப் பறி கொடுத்ததாலும், தொடர்ந்து வரும நிலநடுக்கத்தாலும் உயிர் பிழைத்தவர்களையும் வேதனை விட்டு வைக்கவில்லை.

## இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் மூன்று பலஸ்தீன இளைஞர்கள் பலி


(காஸா)

இஸ்ரேல் காஸா எல்லைப் பகுதியில் மூன்று பலஸ்தீன இளைஞர்கள் இஸ்ரேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. தெற்கு காஸாவில் இஸ்சுபிம் என்ற இடத்தில் இவர்களது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இவர்கள் அவர்களுக்கான அடையாள அட்டையை வைத்திருக்கவில்லை என்று தெரிகிறது. எனினும் அவர்களிடம் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை. பின்னர் எதற்காக சுடப்பட்டனர் என்று தெரியவில்லை.

## உயிரிழப்பு 40 ஆயிரத்தைத் தாண்டியது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஏற்பட்ட கொடூரமான பூகம்பத்தில் இறந்தவர் எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் தெரிவித்தார். மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. 42 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். அடுத்தடுத்து 140 முறை இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பாகிஸ்தானை மையமாகக் கொண்டே நிகழ்ந்துள்ளது எனவும்,தெரிவிக்கப்படுகிறது.



வீண்வெளிக்கு முதல் முறையாக இரண்டு வானியலறிஞர்களை அனுப்ப இருக்கும்சீனாவின் சென்சூ ஆறு விண்வெளிமையத்தை படைவீரர் கண்காணிக்கிறார்.

## 1600 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட ஐரோப்பிய செயற்கைக் கோள் கடலில் வீழ்ந்தது

(மொஸ்கோ)

1600 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டு விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள் ரொக்கெட்டுடன் திடீரெனக் கடலில் விழுந்துள்ளது.

ரஷ்யாவில் உள்ள பிளேசெட்ஸ்க் ரொக்கெட் ஏவு தளத்தில் இருந்து கடந்த சனியன்று இரவு 8.30 மணிக்கு ரொகோட் ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.


இது ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஈ.எஸ்.ஏ) கிரையோசாட் என்ற செயற்கைக் கோளைச் சுமந்து சென்றது. துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் எவ்வளவு வேகமாக உருகுகின்றன என்பதைக் கண்டறிவதற்காக இந்த செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டது.

1600கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள் விண்வெளியில் மூன்று ஆண்டு கள் பூமியைச் சுற்றிவந்து ஆய்வுகளை மேற்கொள்ளும்வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

ரொகோட்ரொக்கெட் கண்டம் விட்டுக் கண்டம பாயும் அணுசக்தி ஏவுகணையாக இருந்து மாற்றப்பட்டு இருந்தது.

இந்த ரொக்கெட் திட்டமிட்டபடி விண்வெளிக்குச்செல்லாமல் உடைந்து கடலில் விழுந்தது. வடதுருவம் அருகே உள்ள ஆட்டிக்பெருங் கடலில் விழுந்தது. உடைந்த பாகத்துடன் சேர்தது செயற்கைக் கோளும் கடலில் விழுந்தது. விண்வெளிக்குப் புறப்பட்டதுமே தகவல் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள விண்கலம் தவறிவிட்டது.

ரொகோட் ரொக்கெட் ஏற்கனவே ஆறு முறை விண்ணுக்கு வெற்றிகரமாகச் சென்றுள்ளது. ஏழாவது முறையாக பறக்க விட்டபோது தான் கடலில் விழுந்தது. இந்த விபத்துக் காரணமாக ரொகோட் மூலம் விண்வெளிக்குச் செலுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் நிறுத்தி வைக்கும் படி ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உத்தரவிட்டுள்ளது.



பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்ப அனர்ததம் காரணமாக தலைநகர் இஸ்லாமபாத் முஷாரபாத் நெடுஞ்சாலையில் ஸ்தமபித மடைந்த வாகனங்களையும் பாகிஸ் தானின் பலகோட் பிரதேசத்தின் அழிவுறற இடத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

# வன்னிப்பிரதேச கால்நடை அபிவிருத்திக்காக பண்ணையாளர்களை ஒருங்கிணைத்து கலந்துரையாடல்

## - முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றம்

(விசுவமடு)

**வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள கால்நடை பண்ணையாளர்களை ஒன்றிணைத்து கால்நடை அபிவிருத்தியை கருத்தில் கொண்டு முக்கிய கலந்துரையாடலொன்று கடந்த சனிக்கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணை தலைமையில் நடைபெற்றது. இதில் முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.**

நிகழ்வில் சின்னண்ணையின் உரையினைத் தொடர்ந்து தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் மற்றும் பேராசிரியர் தவரட்ணராசா ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் கருத்து வழங்கும்போது குறிப்பிடுகையில், கால்நடை உற்பத்தியாளர்களை நாங்கள் ஒன்று கூட்டியதன் முக்கியநோக்கம் கால்நடை வளர்ப்பவர்கள் நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். இவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் கலந்தாலோசித்திருக்கின்றோம். இருந்தபோதிலும் கால்நடைகளை விருத்தி செய்வதற்கான எந்தவொரு தீர்க்கமான முடிவையும் இதற்கான நல்லதோர் திட்டத்தினையும் கால்நடை வளர்ப்பாளர்களும் நாங்களும் ஒன்று சேர்ந்து இதுவரை தயாரிக்கவில்லை. இதனாலே தான் கால்நடை அபிவிருத்தி மேற்கொள்ள முடியாத ஓர் நிலை இருந்து வருகின்றது. இதனைக்கருத்தில் எடுத்தே இச் சந்திப்பை ஏற்படுத்தியுள்ளோம். வன்னிப்பெரு நிலப்பரப்பில் கால்நடைவளர்ப்பாளர்களுக்கு தமது கால்நடைகளை விற்பனை செய்ய வேண்டும் என்ற ஓர்மனநிலை எல்லோரிடமும் இருப்பதை அறியமுடிகிறது. இப்படியான ஓர் மனநிலை ஏற்பட்டால் கால்நடைகள் அழிந்துபோகும் ஓர் அபாயநிலை ஏற்பட்டுவரும். இதனைக் கருத்தில் எடுத்தே கால்நடைப்பண்ணையாளர்களை நாம் ஒன்று கூட்டி உள்ளோம் பண்ணையாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்தே கால்நடை அபிவிருத்திக்கான ஒரு திட்டத்தினை தயாரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கால்நடைகளை விற்பனை செய்வதற்கு கால்நடை உரிமையாளர்கள் விரும்பும் பட்சத்தில் இடைத்தரகர்கள் கால்நடைகளை வாங்கி களவாக வன்னிக்கு வெளியே கொண்டுசெல்லும் ஓர்நிலையும், கால்நடைகளை பட்டிகளில் இருந்து களவாக கொண்டு செல்லும் ஓர் அபாய நிலையையும் வன்னியில் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்நிலை தொடருமானால் கால்நடைகள் முற்றாக அழிவு ஏற்பட்டுவிடும் கால்நடைகளின் விபரத்தை நாங்கள் எமது பிரதேச இணைப்பாளர்கள் மூலம் திரட்டியபோது எமக்கு சரியான ஓர் புள்ளிவிபரம் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் வன்னியில் இருந்து ஒவ்வொரு நாளும் மாடுகள் களவாக வெளியில் கொண்டு செல்கின்றார்கள்.இவற்றை கருத்தில் எடுத்தே.நாங்கள் வன்னிக்கு வெளியில் மாடுகள் கொண்டு செல்வதற்கான அனுமதியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம்.

குறிப்பாகச் சொல்லப்போனால் வன்னிப்பெருநிலப் பரப்பிலுள்ள மக்களின் இறைச்சிதேவைக்காக ஒருமாதம் ஆயிரம் மாடுகள் தேவைப்படும் நிலையில் கால்நடை அபிவிருத்தி சரியாக திட்டமிட்டு மேற்கொள்ளாவிடில் கால்நடைகள் முற்றாக அழியும் நிலை ஏற்பட்டுவிடும் அபாயம் உண்டு என்றார்.

வன்னிப்பெருநிலப்பரப்பிலுள்ள மக்களின் போசாக்கு தேவையான பால் உற்பத்திக்கே மாடுகள் இல்லாத ஓர் நிலை உருவாகி வருவதை அவதானிக்க முடிகின்றது என மேலும் அவர் கூறினார்.

நிகழ்வில் முல்லைமாவட்ட பிரதேச சபை விசேட ஆணையாளர் கிருஸ்ணபிள்ளை, கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் மற்றும் முக்கிய பிரமுகர்கள், பெருமளவான கால்நடை பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர். (46)

# தமிழீழ நுண்கலைப் பிரிவின் ஓவியப்போட்டி முடிவுகள்

## -நாளை பரிசளிப்பு

தமிழீழ நுண்கலைப் பிரிவின் கிளிநொச்சிமாவட்ட நுண்கலைக் கல்லூரியினால், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட "தூரிகைத் துளிகள்;" என்னும்ஓவியப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. பரிசுக் குரியவர்கள், நாளை புதன்கிழமை பி.ப .3.00மணிக்கு கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரிக்கு வருகை தருமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

பிரிவு I (தரம்- 4,5)

முதலாமிடம் -செல்வன் செ.ஜேம்ஸ் கலையரசன் கிளி/ தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம்- செல்வன் பா.தனுசியன் கிளி/தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை, மூன்றாமிடம் - செல்வி ஹேமரஞ்சினி கிளி/தருமபுரம் இல.01 அ.த.க. பாட சாலை.

பிரிவு II (தரம்- 6,7,8)

முதலாமிடம்-செல்வன் அ.நிஷாந்தன் கிளி/ பாரதி வித்தியாலயம், இரண்டாமிடம்- செல்வன் ஜெ.முகிலன் கிளி/ பாரதி வித்தியாலயம்,மூன்றாமிடம்- செல்வன் வே.டிலக்ஷன் கிளி/புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம்.

பிரிவு III(தரம்-9,10,11)

முதலாமிடம் செல்வன் டினோஜன் கிளி/பூநகரி நல்லூர் ம.வி, இரண்டாமிடம் செல்வன் உ.அனுராஜ் கிளி/ பூநகரி நல்லூர் ம.வி.,மூன்றாமிடம் செல்வன் செ.சிவகணேசன் கிளி/மத்திய கல்லூரி.

பிரிவு IV (உயர்தரம்)

முதலாமிடம் - செல்வன் து.மோகனசிறி கிளி/ பரந்தன் இந்து ம.வி., இரண்டாமிடம்- செல்வி சா.சர்மிளா கிளி/கிளிநொச்சி ம.வி.

பிரிவு V(ஆசிரியர்கள்)

முதலாமிடம் திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி கிளி/ கிளிநொச்சி ம.வி., இரண்டாமிடம் செல்வி க.கமலா தேவி கிளி/பாரதி வித்தியாலயம்.

# அம்பாறை அதிரடிப்படையினரால் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களின் நினைவு நிகழ்வு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடாவில் 09.10.2002 அன்று சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் எழுவரினதும் மூன்றாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டன.திருக்கோவில் விநாயகபுரம் மாணிக்கப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவுள்ள இந்த நாட்டுப்பற்றாளர்களின் நினைவுத்தூபிக்கு முன்னால் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக்கழகத் தலைவர் உதயன் தலைமை தாங்கினார்.

ஈகச்சுடரினை திருக்கோவில் ப.நோ.கூ.ச. தலைவர் க.செல்வராசா, சமுர்த்தி அலுவலர் த.சுந்தரமூர்த்தி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து இந்த நாட்டுப்பற்றாளர்களின் தூபிகளுக்கு அவர்களின் பெற்றோர் மலர் மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து திருக்கோவில் பிரதேச விவசாயக் கம்பனி முகாமையாளர் க.கங்காதரன், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனை கணக்காளர் ச.கணேசமூர்த்தி, தம்பிலுவில் கிராமசேவை அலுவலர் கண்ணன் ஆகியோர் உரையாற்றினர்.



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினரால் நடாத்தப்பட்ட கண்காட்சியின் ஒரு பகுதியினை படத்தில் காணலாம். (படம்-சோதி)

# அமெரிக்க சுதந்திரபிரகடனத்தின் சிரஞ்சீவி தன்மையே வவுனியா எழுச்சிப் பிரகடனத்தின் சாராம்சம்

## -சிட்னிநகர தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரதிநிதி

அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தின் சிரஞ்சீவித்தன்மையே வவுனியாப் பிரகடனத்தின் சாராம்சம் என்று அவுஸ்திரேலிய சிட்னி நகர தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் அரசியல்பிரிவைச்சேர்ந்த ம.தனபாலசிங்கம் கூறினார்.

அவுஸ்திரேலியசிட்னி நகரில் நடைபெற்ற வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும்பிரகடன நிகழ்வில்அவர் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் அந்நிய சிங்கள இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேற வேண்டும் என்பது முதலாவது கோரிக்கை. எமது மக்களை கொன்றுகுவித்து எமது சகோதரிகளை பாலியவல்லுறவுக்குள்ளாக்கி எமது சிறுவர்களைபாடசாலைகளில் குண்டுவீசி கொலை செய்து கிரிசாந்திகளை கடத்தி வல்லுறவுக் குட்படுத்தி புதைகுழிகளில் புதைத்து ஏதிலிகளாய் தேவாலயங்களிலும், கோவில்களிலும் அடைக்கலம் புகுந்த பெண்களையும் சிறார்களையும் கொன்று குவித்த அந்நிய சிங்கள இராணுவத்திற்கு எம் மண்ணில் இருக்க என்னதகுதி?

அதனால்தான் அவர்கள் உடனடியாக எமது மண்ணை விட்டுவெளியேற வேண்டும் என்று வவுனியாப் பிரகடனம் வேண்டுகின்றது.

அத்தோடு எமது தேசிய விடுதலைப்போராட்டத்தை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தை வேண்டுகின்றோம். எமதுபோராட்டம் நீதியானது. நியாயமானது. தர்மத்தின்பாற்பட்டது எனத்தெரிவித்தார்.

# திருமண வீட்டில் புகுந்து துப்பாக்கிதாரிகள் அட்டகாசம்

(மட்டக்களப்பு)

சந்திவெளிப் பாலையடித் தோணாவில் பகுதியிலுள்ள திருமண வீடு ஒன்றுக்குள் புகுந்த ஆயுததாரிகள் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததுடன் அங்கிருந்தவர்களை துன்புறுத்தியுள்ளனர். கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலையடித்தோணாக் கிராமத்தின் கடற்கரையோரமாக குடியிருந்த மக்கள் தற்போது இடம்பெயர்ந்து தற்காலிகமாக அமைத்துக் கொடுத்த குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். புதன்கிழமை இரவு 10.45 மணியளவில் கறுப்புத்துணியால் முகங்களைக் கட்டிய நபர்கள் ஆயுதங்களுடன் குறிப்பிட்ட குடியேற்றத் திட்ட வீடுகளுக்குள் புகுந்த ஆயுததாரிகள் பெண்களின் கழுத்தில் துப்பாக்கிகளை வைத்து மிரட்டியதுடன் ஒரு சிலரின் பெயர்களைக் கேட்டு விசாரித்ததாகவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். திருமண வீட்டில் மின் பிறப்பாக்கி பாவிக்கப்பட்ட நிலையில் அதனைச் சேதப்படுத்தியுள்ளனர்.

# தமிழீழ கடற்படை துணைப்படை உ-வது அணி; முல்லைத்தீவில் பயிற்சிகள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டத்தில் தமிழீழ கடற்படையின் தேசிய துணைப்படையின் இரண்டாவது அணியினருக்கானபயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

லெப்.கேணல் திருவடி பயிற்சிப்பாசறையின் இரண்டாவது அணியின்ஆரம்ப நிகழ்வுநேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணிக்கு துணைப்படை வீரர் பி.சுசிலன் தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியினைகடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றினார். லெப்.கேணல் திருவடியின் படத்திற்கான ஈகச்சுடரினை விஜயகுமார் ஏற்றினார். மலர்மாலையைப் போராளி வைரமுத்து அணிவித்தார். உறுதி உரையைத் தொடர்ந்து சிறப்புரையை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஆற்றினார். இரண்டாம் அணியின் பயிற்சியில் 150 இற்கும்அதிகமான துணைப்படை வீரர்கள் பங்குபற்றினர்.




கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி பத்தாம் ஆண்டு வருடாந்த சிறுவர் கலைவிழா நேற்று முன்தினம்கிளிநொச்சிபண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.மேற்படி கலைநிகழ்வில் கலந்துகொண்ட சிறார்களை படத்தில் காணலாம். (படம் சோதி)

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கலந்துரையாடல்

(வவுனியா செய்தியாளர்)

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை வவுனியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமைகாலை ஒன்பதுமணிமுதல் மாலை நான்கு மணிவரை வவுனியா புகையிரத நிலையம்முன்பாக அமைந்துள்ள கமநலசேவை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கானசட்டம் தொடர்பாகக் விசேடமாக ஆராயப்படவுள்ளது. (10)

# 2ஆம் லெப். மாலதி நினைவு நாள் நிகழ்வில்

## மன்னார் - ஆண்டான்குளம்







(படங்கள் : சசி)

## யாழ்ப்பாணம் - கோப்பாய்








(படங்கள் : 41, 28)

## கிளிநொச்சி



(படம் : சோதி)

## பளை





(படங்கள் : தீபன்)

# வழியனுமதிப்பத்திரம் உள்ள பேருந்து வண்டிகளே போக்குவரத்து சேவையில் ஈடுபட முடியும்

### யாழ். மாவட்ட மோ.போ.வ திணைக்கள உதவி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சகல தனியார் பேருந்து வண்டிகளும், மோட்டார் போக்குவரத்து செயலகத்தின் பயணிகள் சேவை வழிஅனுமதிப் பத்திரம் பெற்றே சேவையாற்ற முடியும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்ட ஒருவர் பேருந்து வண்டியினை விற்பனை செய்வதாக இருந்தால் பேருந்து வண்டியை மட்டுமே விற்பனை செய்ய முடியும். அவ் வாகனத்தின் வழி அனுமதியை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்ய முடியாது. ஆனால் விற்பனை செய்யப்பட்ட சிற்றூர்திக்கு பதிலாக வேறொரு பேருந்து வண்டியைக் குறித்த காலப் பகுதிக்குள் கொள் வனவு செய்து பேருந்து வண்டி மாற்றத்தை மேற் கொள்ள முடியும்.

அத்துடன் பேருந்து வண்டி ஒன்றை புதிதாகக் கொள்வனவு செய்யும் ஒருவர் யாராவது ஒருவரிட மி[illegible]து பேருந்து வண்டியை மட்[illegible] கொள்வனவு செய்ய முடியும். கொள்வனவு செய்யும் பேருந்து வண்டியானது ஏற்கனவே பாதை ஒன்றின் வழி அனுமதிப் பத்திரம் பெற்று சேவை யாற்றியிருப்பின்அப்பாதை அனுமதியுடன வாகனத்தைக் கொள்வனவு செய்ய முடியாது.அத்துடன் கொள்வனவு செய்தவிடம் ஏற்கனவே பயணிகள் சேவைக்கான பாதை அனுமதி இல்லாதவிடத்து அப்பாதையின் மீதோ அல்லது வேறு பாதை ஒன்றின் மீதோ இவ் வாகனத்தைச் சேவையில் ஈடுபடுத்த முடியாது. மேலும் தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாதைகளிலும், தேவைக்கு மேலதிகமாக தனியார் பேருந்து வண்டிகள் சேவையாற்றுவதால் புதிய பாதை வழிஅனுமதிப் பத்திரங்கள் வழங்குவது முற்று முழுதாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இலங்கை முழுவதிலும், புதிய வழி அனுமதிப் பத்திரம் வழங்குவது மறுஅறித்தல் வரும் வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# காரைநகரில் கிராம அபிவிருத்திக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் நடவடிக்கை

யாழ். காரைநகரில் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த அடிப்படையில் கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்டிருக்கும் பத்துக் கிராமங்களை தெரிவு செய்து அவற்றைப் புனரமைப்பு செய்து அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த பத்துக் கிராமங்களினதும் அபிவிருத்தி நடவடிக்கைளுக்காக பட்டினிக்கு எதிரான நிறுவனம் 15 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதி மூலம் பாதிப்புக்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பத்துக் கிராமங்களில் வீதி, சுகாதாரம், கல்வித் தரமேம்பாடு வாழ்வாதார நடவடிக்கை போன்றவற்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (33)

# சங்கிலியன் சிலையை உரிய இடத்தில் நிறுவ யாழ். மாநகர ஆணையாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளருக்கும் சங்கிலியன் சனசமூக நிலைய பொதுமக்களுக்குமிடையேயான சந்திப்பு சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. நல்லூர் சங்கிலியன் மன்றத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஆணையாளருக்கு மலர்மாலை சூட்டி பாராட்டுப்பத்திர மும் வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட சந்திப்பில் அப்பகுதியைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். மக்கள் சார்பில் யாழ்ப்பாணத்தில் மீண்டும் கலாச்சார நிகழ்வுகளை நடத்தக் கூடிய முறையில் யாழ். திறந்த வெளியரங்கைத் திருத்தியமைக்க வேண்டும் எனவும் மற்றும் சங்கிலியன் மன்னன் சிலையை உரிய இடத்தில் நிறுவி அதனை மெருகூட்ட வேண்டும் எனவும் வேண்டுதல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் இதற்கு பதில் அளிக்கும் போது; குறிப்பிட்ட வேலைகளை முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்த நடவடிக்கையெடுப்பதாகவும் இதற்குப் பொதுமக்களிடத்தில் இருந்து முழுமையான ஆதரவு கிடைக்க வேண்டும் எனவும் தற்போதைய நிலையில் யாழ். மாநகர சபைக்கும் பொதுமக்களுக்கும் இடையே இடைவெளி காணப்படுவ தாகவும் இதனை நிவர்த்தி செய்வதே முதல் கடமையெனவும் குறிப்பிட்டார். (41)

# யாழில் தேர்தல் கண்காணிப்பின் பவ்ரல் அமைப்பு ஈடுபடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பவ்ரல் அமைப்பு தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இமமுறை ஈடுபடும் என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. அந்த வகையில் வன்முறைகள் அற்ற நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் நடத்தப்படுவதை உறுதிப் படுத்தும் முகமாக இப் பவ்ரல் அமைப்புச் செயற்படவுள்ளது.

இதற்காக எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் காலத்தில் பவ்ரல் அமைப்பின் 1000 இற்கும் மேற்பட்ட தேர்தல் கண்காணிப்பாளர் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# இந்திய ஆளும் தரப்பிற்கு புதிய தலையிடி!

அரசியல் என்பதே நாடக மேடை தான் என்பதை இந்திய அரசியலில் காணக் கூடியதாகவுள்ளது. ஏனெனில் எதிர்க்கட்சி மீது ஆளும் கட்சி குற்றச்சாட்டுக்களை சரமாரியாக அடுக்கிய நிலை நேற்றுக் காணப்பட்டது. இன்றோ திரை விழுந்து காட்சி மாறி விட்டதைத்தான் பார்க்கக்கூடியதாகவுள்ளது. அந்த வகையில் தான் ஆளும் கட்சி மீது எதிர்க்கட்சி குற்றச்சாட்டு அம்புகளை வீசத் தொடங்கியுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு வெளிநாடுகளிலி ருந்து பணம் வந்ததா...? உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சி போர்க்கொடி தூக்கியுள்ளது. அத்துடன் மத்தியரசு இது தொடர்பான வெள்ளை அறிக்கையினை வெளியிட்டு தமது சந்தேகத்தைத் தீர்க்க வேண்டும் என்பதாய் ஒற்றைக் காலில் தவம் செய்தது போல் முரண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றது.

இதே வேளை புதிய சர்ச்சை ஒன்றையும் மேற்கு வங்காள முன்னாள் முதல்வரான ஜோதிபாசு உருவாக்கியுள்ளார். அமெரிக்கா விடம் இந்திராகாந்தி பணம் வாங்கியதாகவும், அந்த விவகாரம் தமக்குத் தெரியும் என்றும் எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கூட்டணிக்கு வலுச் சேர்த்துள்ளார்.

இதனால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி யரசு இவற்றையெல்லாம் எவ்வாறு சமாளிக் கப் போகின்றது...? எதிர்க்கட்சிகளுக்கு அறிவிக்கப் போகும் பதில் தான் என்ன...?

பெற்றுள்ளதாக எழுதப்பட்டிருப்பதாக லண்டன் பத்திரிகையே இந்த அதிர்ச்சித் தகவலை அங்கு வெளியிட்டது.

ஆனால் லண்டன் பத்திரிகை செய்தி இந்தியாவையே ஒருகலக்குக் கலக்கியுள்ளது. அதிலும் மறைந்த முன்னாள் பிரதமரான இந்திராகாந்தியின் பெயரும், இந்த விவகாரத் தில் இழுத்து விடப்பட்டிருக்கின்றது. அதாவது பிரதமராக இந்திராகாந்தி இந்தியாவில் ஆட்சி செய்த காலத்தில் தான் ரஷ்யாவிடம் இருந்து பணம் கைமாறியதாக புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளதாக பாரதிய ஜனதா விசாரணை வேண்டுமென்று அழுங்குப் பிடியில் நிற்கின் றது.

அதுமட்டுமன்றி அமெரிக்க உளவு நிறுவனம் (சி.ஐ.ஏ) பாகிஸ்தான் உளவு நிறுவனம் (ஐ.எஸ்.ஐ) என்பவற்றிலிருந்தும் பணம் வந்துள்ளதா...? என்பது குறித்தும் மத்தி யரசு பதில் தரவேண்டுமென்று பாரதிய ஜனதா மேலும் மேலும் தமது குற்றச் சாட்டுக்களை நீட்டியுள்ளது.

மேலும் ரஷ்யா, அமெரிக்கா, பாகிஸ்தான் நாட்டு உளவு நிறுவனங்கள் இந்தியாவில் செயற்படுகின்றனவா...? என்று வெள்ளை அறிக்கையினை மத்தியரசு உடனடியாக வெளியிட வேண்டுமென்றும் மத்தியரசிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனை வைத்துப் பார்க்கையில் இந்தியாவில் உளவு நிறுவனங்கள் செயற்படு வதாக எதிர்க்கட்சி மறைமுகமாக

ஏனெனில் ரஷ்ய உளவு நிறுவன அதிகாரியின் புத்தகமோ இன்னும் வெளி வரவேயில்லை. இப் புத்தகம் வெளி வராத போது எப்படி லண்டன் பத்திரிகை கூறுவது உண்மையாக இருக்கக் முடியும் என்றும் சந்தேகம் எழுந்திருக்கின்றது.

ஆனால் இதுவரையும் காங்கிரஸ் கட்சியும் சரி மத்தியரசும் சரி தனிப்பட்ட வகையில் இச் சம்பவம் குறித்து எவ்விதமான அலட்டலுமின்றி இருக்கின்றன. இந்த அமைதி குறித்தே பலவிதமான சர்ச்சைகள் எழுந்தி ருக்கின்றன.

அந்த வகையில் ஏற்கனவே ரஷ்யாவுடன் மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி

ருக்கின்றதா...

அல்லது லண்டன் பத்திரிகைச் செய்தி எம் நாட்டைப் பற்றியதாக இருந்தாலும், அதில் உண்மை இருக்க வேண்டுமே... ஆதாரங்கள் எதுவுமின்றி செய்தியை மட்டுமே கொண்டு எவ்விதமான எதிர் நடவடிக்கைகளையும் மேற் கொள்வது கேலிக்குரிய ஒன்று என்று மௌனம் காக்கின்றதா...

இதே வேளை மேற்கு வங்கத்தைச் சேர்ந்த முன்னாள் முதல்வரான ஜோதிபாசு வின் குற்றச்சாட்டும் நெருடலை ஏற்படுத்தாமல் இல்லை. ஏனெனில் அமெரிக்காவிடமிருந்து இந்திராகாந்தி பணம் பெற்றதாக அவர் கூறியிருக்கின்றார். ஆனால் ஏன்.. எதற்கு..



மன்மோகன் சிங் சோனியா

என்ற சந்தேகமே அனைவர் மத்தியிலும் துளிர் விட்டிருக்கின்றது.

இத்தகைய சிக்கல்களுக்கு யார் காரணம் சிக்கல்களை உருவாக்கியவர்கள் யார்... என்று நோக்கின்...

இவையனைத்திற்கும் பின்னால் ஒரு பத்திரிகை செய்தியே காரணம்; பத்திரிகைச்



இந்திராகாந்தி

செய்திக்கு ரஷ்யாவின் முன்னாள் உளவுப் படை அதிகாரி ஒருவரே காரணம் என்பதை காணக்கூடியதாகவுள்ளது.

அந்த வகையில் ரஷ்யா பல்வேறு நாடுகளாக உடையும் முன்பு அந் நாட்டின் உளவு நிறுவனத்தின் (கே.ஜி.பி) மூத்த அதிகாரியான வாசிலி மிட்ரோகியே இந்திய அரசியலில் தற்போதைய கதாநாயகனாக வலம் வருகின்றார் என்றால் மிகையில்லை.

ஏனெனில் வாசிலி மிட்ரோ இப்போது ஓய்வு பெற்று விட்ட போதும் இப்போதும்கூட பேசப்படுகின்றார். இதற்குக் காரணம் அவர் எழுதியுள்ள புத்தகமே! இந்தப் புத்தகத்தில் தன்னுடைய காலத்தில் இந்தியப் பிரதமர் உட்பட அரசியல் தலைவர்கள் செய்தி நிறுவனங்கள் என்பனவும் கோடிக்கணக்கில் பணத்தை தமது நாட்டிலிருந்து பெற்றுள்ள தாக அதிரடியினை ஏற்படுத்தியுள்ளார்.

இவரது புத்தகத்தின் விபரத்தினை பார்க்கையில் அது காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டைச் சேர்ந்த அமைச்சர்கள், மந்திரிகள், பத்திரிகை யாளர்கள், பத்து செய்தி நிறுவனங்கள் என்பன ரஷ்யாவிடம் கோடிகோடியாக பணம்

நம்புவதையே காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் இவற்றையெல்லாம் மத்தியரசு வெள்ளையறிக்கை மூலம் நிராகரிப்பதையும் அக்கட்சி விருப்பம் கொண்டிருக்கின்றது எனலாம்.

அந்தவகையில்தான் முன்னாள் பிரதமர் வாஜ்பாயும், ஜஸ்வந்த் சின்காவும் கூட்டாகப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளனர் எனலாம். ரஷ்ய உளவு நிறுவனத்திடமிருந்து இந்திய பிரதமர் இந்திராகாந்தி முதலானோருக்கு பணம் கைமாறியதாக லண்டன் பத்திரிகை செய்தி வெளிடப்பட்டுள்ளது. இந்தச் செய்தி தவறுதலாகவோ, தவறாகவோ கூட வெளி யிடப்பட்டிருக்கக் கூடும் எனவே உடனடியாக நஷ்ட வழக்கு தொடருமாறு பிரதமருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

ஆனால் இதுவரையும் காங்கிரஸ் கட்சியும் சரி, மத்தியரசும் சரி மௌனவிரதமே காத்து வருகின்றன. இதனால் மிகவும் உஷாரடைந்து போவது பாரதிய ஜனதா கட்சிதான். ஏனெனில் இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கூறியவர் பாரதிய ஜனதாவின் துணைத் தலைவரான வெங்கையா நாயுடுவே இவரைத் தொடர்ந்து காங்கிரசின் தொடர் அமைதியை கண்டு கொண்ட பாரதிய ஜனதா தலைவர் எல்.கே அத்வானியும் இந்த விவகாரத்தில் மூக்கை நுழைத்திருக்கின்றார். வெளி நாடுகளிடமிருந்து பணம் வந்ததா... என்பது குறித்து வெள்ளையறிக்கை கேட்டவர் இவர் தான்!

இந்திராகாந்தி 1966,1971,1980 காலப்பகுதி களில் பிரதமர் பதவி வகித்துள்ளார். இவற்றில் 1971இல் ரஷ்யாவுடன் இந்தியா நட்புறவு ஒப்பந்தம் மேற் கொண்டிருக்கின்றமையும், அதன் மூலம் இந்தியப்பொருளாதாரம், வளர்ச்சியடைந்ததாகவும், உண்மைத் தகவல்கள் இருக்கின்றன. ஆனால் இந்திராகாந்தி முதல் பத்திரிகையாளர் வரை பெட்டி பெட்டியாக ரஷ்யா உளவு நிறுவனத்திடம் பணம் பெற்றதாக கூறப்ப டுவதை ஏற்க முடியாது என்று காங்கிரஸ் கட்சியில் பலர் முணுமுணுக்கின்றனர்.

அது மட்டுமன்றி கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட சம்பவங்களை கிளறுவது மறைந்தவர்களது புகழை இல்லாது ஒழிக்கும் செயல் தான் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதே வேளை லண்டன் பத்திரிகை செய்தியே ஏன் பொய்யாக இருக்கக் கூடாது என்றும் வினா எழுந்திருக்கின்றது.

நட்புறவு ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருப்பது தெரிய வந்திருப்பதால்... ரஷ்ய உளவுத் துறை அதிகாரி புத்தகத்தில் எழுதியிருப்பதும் லண்டன் பத்திரிகையின் செய்தியும், ஏன்.. உண்மையாக இருக்காதா... அடுத்து ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் தமது உளவு நிறுவனங்களை பிற நாடுகளில் நடமாட விடுவதே வழமை. அந்த வகையில் இந்தியாவிலும் அத்தகையதோர் நிலை ஏற்பட்டிருக்கலாமே..

அது மட்டுமன்றி இதுவரையும், காங்கிரஸ் கட்சியும் சரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் சரி எவ் விதமான எதிர்ப்பினையும் காட்டவில்லையெனில் அதற்கு காரணம் தான் என்ன... என்றெல்லாம் சந்தேகம் உலாவு கின்றது.

மறுபுறம் மத்தியில் காங்கிரஸ் கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டும் அங்கம் வகிக்கின்றது. எனவே இக் கூட்டணி யாட்சியை சிதற வைக்கவே வெளி நாடுகள் புரளியினைக் கிளப்பி விட்டிருக்க முடியாதா..?

ஏனெனில் இந்தியா முன்பைவிடவும்



வாஜ்பாய்

வளர்ச்சிப் போக்கில் மாற்றம் தெரிவதாக சர்வதேச வர்த்தகப் பத்திரிகையான ''பிஸ்னஸ்வீக்'' கூறியிருக்கின்றதை சுட்டிக்காட்ட முடியும். உலகில் தலைசிறந்த நூறு தொழில் நுட்ப நிறுவனங்களின் பட்டியலில் ஆறு இந்திய நிறுவனங்கள் இப்போது நுழைந்திருக்கின்றன. இந்த வெற்றிப் பாதையில் நடக்கத் தொடங்கி யுள்ளதாக அப் பத்திரிகை சான்று வழங்கியி ருக்கின்றது. அதனால் தான் வெளி நாடுகளின் சதியாக ஏன் இருக்கக் கூடாது... எனும் சந்தேகம் விழுந்திருக்கின்றது.

அது மட்டுமன்றி இந்திராகாந்தியின் காலத்தில் ரஷ்ய உளவு நிறுவன அதிகாரி கூறுவது போல் சம்பவங்களே நடக்கவில்லை என்பதால் தான் காங்கிரஸ் அமைதி காத்து எங்கிருந்து இந்தக் குற்றச்சாட்டுப் பந்து தம் மீது வீசப்பட்டுள்ளது என்று ஆரம்ப இருப் பிடத்தை மறைமுகமாக தேடிக் கொண்டி



ஜோதி பாசு

என்றெல்லாம் அவர் விபரம் கூறவில்லை.

அதேவேளை காங்கிரஸ் கட்சி மீதே கரிபூச முற்படும் ஜோதிபாசு, மார்க்சிஸ்ட கம்யூனிஸ்ட் பற்றி மூச்சே விடவில்லை. ஏனெனில் அவர் அக் கட்சியைச் சேர்ந்தவராகும். எனவே ஜோதி பாசுவின் குற்றச்சாட்டும் கூட ஆதாரங்களின்றி வாய் வார்த்தையினை மட்டுமே கொண்டதாகும். அதனால் இதனை ஏற்றுக் கொள்ள முடியுமா.. என்பதே சந்தேகம் தான்!

ஆனால் தேசிய சனநாயக கூட்டணியோ தமது ஆயுதமாக ரஷ்ய உளவு நிறுவன அதிகாரியின் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டிருக்கின்றது. இது எங்கே போய் முடியும் என்பதை பொறுத்திருந்து தான் காண வேண்டும்.



அத்வானி

என்றாலும், தேசிய சனநாயக கூட்டணியிலும், ஜோதிபாசுவினதும் எதிர்ப்பு களுக்கு காங்கிரஸ் கட்சி தொடர்ந்து மௌ னம் காப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க மாட்டாது. ஏனெனில் அது பல விதமான விமர்சனங்களையே உண்டு

அ.கலைவாணி

பண்ணிக் கொண்டிருக்கும் என்பதால் காங்கிரஸ் மேலிடம் வாயைத் திறந்து பேசித்தான் ஆக வேண்டும். அந்நாள் எப்போது..? காங்கிரசின் பதில் எதுவாக இருக்கும்....? ஐக்கிய முற்போக்குக் கூட்ட ணியை வலுவூட்டுவதாகவா? அல்லது தேசிய சனநாயகக் கூட்டணியை கொம்பு சீவி விடு வதாகவா? .. என்பதை காலம் தான் பதி லளிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை எனலாம்.




# அப்பாசாமிகளான உலக அணி

இரு நாட்டு அணிகள் மோதுகின்றன என்றால் அந்த அணிகளைச் சேர்ந்த ரசிகர்கள் சொந்த நாட்டின் அணி வெற்றிபெற வேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் தற்போது நடைபெற்று வரும் அவுஸ், உலக 11 பேர் அணிகளுக்கிடையிலான சுப்பர் சீரிஸ் போட்டியில் அவுஸ்திரேலிய ரசிகர்களைத் தவிர கிரிக்கெட் விளையாடும் நாடுகளைச் சேர்ந்த அத்தனை ரசிகர்களும் உலக அணிதான் வெற்றிபெற வேண்டும் என்று விரும்பினார்கள்.

விளையாட்டில் வெற்றி தோல்வி பெரிய விடயம் அல்ல. ஆனால் எப்படி தோற்கிறார்கள் என்பது முக்கியம். ஏழு நாடுகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட வீரர்களின் முதலாவது ஒரு நாள் போட்டி, ரசிகர்களை எந்த வகையிலும் கவரவில்லை. இரண்டாவது போட்டி ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்த போதும் வெற்றிக்கான இலக்கை அடையமுடியாது போனது ஏமாற்றமே.

இந்த நிலையில் மூன்றாவது போட்டியிலாவது வெற்றி பெற்று உலக அணி மானத்தைக் காக்கும் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே விஞ்சியது. இதன் மூலம் எத்தனை ஜாம்பவான்கள் ஒன்று சேர்ந்தாலும் தங்களை அசைக்க முடியாது என அவுஸ்அணி நிரூபித்துள்ளது.

ரசிகர்களைப் பொறுத்தவரை உலக அணியில் விட்டோரி, கிறிஸ்கெய்ல்ஸ், சங்கக்கார, முரளிதரன், பிளிண்டொப் ஆகியோரை தவிர தங்கள் நாட்டிலிருந்து பங்கேற்ற வீரரைப் பற்றி சொல்வதற்கு ஏதுமில்லை.

யார் யார் சாதிப்பார்கள் என்று எதிர்பார்த்தார்களோ அவர்கள் ஏமாற்றத்தை தந்தது ஒரு சோகமான முடிவே. இது அவுஸ்திரேலியாவுக்கு வாய்ப்பாக அமைந்தது.

ஏற்கனவே பலம் வாய்ந்த அவுஸ்திரேலியா சொந்த மண்ணில் ஒரு தோல்வியை சந்திக்க விரும்பவில்லை. போட்டியின் ஒவ்வொரு கட்டத்திலும் அதன் வேகம் இருந்தது.

முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சைத் தவிர வேறெதையும் ரசிக்காத ரசிகர்கள் இரண்டாவது போட்டியில் சங்கக்கார, ஹைஸ்ல்ஸ் ஆகியோரின் துடுப்பாட்டத்தைத் தவிர வேறு எதுவும் திருப்தியாக அமையவில்லை. மூன்றாவது போட்டி முதலாவது போட்டியை விடவும் மோசமாக அமைந்தது உலக அணியை ஆவுஸ் அணி சாம்பா ராக்கியது என்று தான் கூற வேண்டும்.

மொத்தத்தில் உலக அணி வீரர்கள் சம்பியன்கோப்பை வென்ற முதல் அணி என்ற சாதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

சூரப்புலிகள், சூறாவளிகள், சிங்கங்கள் என்று வர்ணிக்கப்பட்டவர்கள் இன்று ரசிகர்கள் பார்த்துப்





நெல்லி மூடையை அவிழ்த்துவிட்டது போல் விக்கெட்டுக்கள் சிதறும் போதே அவுஸ். வீரர்கள் தங்களுக்கு பெரிய நிர்ப்பந்தம் இல்லை என்று உணர்ந்துவிட்டார்கள்.

இதன் மூலம் தாங்கள் ஒவ்வொருவரும் உலகின் தலைசிறந்த வீரர்கள் என்பதை மீண்டும் நிரூபித்து விட்டனர்.

பங்களாதேஷ் வீரர்கள் போல் விளையாடினர் என்று கூறுவதை விட மெல்போர்னில் செய்ய வேண்டியதை குறித்த நேரத்தில் செய்யாத அப்பாசாமிகளாக மாறியிருந்தனர்.

இந்த நிலையில் மறக்காத 18 ஆண்டுகளுக்குப்பின்னரான தோல்வியில் இருந்து மீண்டதுடன் உலக சம்பியன் அந்தஸ்தை இழந்துவிட்டது என்ற விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன் இழந்த கௌரவத்தையும் மீட்டுள்ளது. அத்துடன் ஐ.சி.சி நடத்திய சுப்பர் சீரிஸ் தொடரில் பாவப்பட வேண்டிய நிலைக்கு பரிதாபமாகி விட்டார்கள் உலக அணி வீரர்கள்.

தாங்கள் இல்லாவிட்டால் தங்கள் அணி தலைகுப்புற விழுந்துவிடுமென நினைத்திருந்த இவர்களது மீசையில் ஒட்டியிருப்பது ஆஸி மண். அதை துடைத்துவிட்டு அடுத்துவரும் டெஸ்டிலாவது வெற்றி பெற வேண்டாம் கொஞ்சம் மானத்துடனாவது தோற்க வேண்டும் என்பதே தற்போது உலக ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.


இ.சியான்

---

தமிழர் தாயகத்தின் குட்டி பிரேசில்என வர்ணிக்கப்படும் மன்னார் உதைப்பந்தாட்டத்தில் தனக்கென ஒருதனியிடத்தைக் கொண்டுள்ளது என்கிறார் தமிழீழ விளையாட்டுதுறைபொறுப்பாளர் பாப்பா.

இதற்கு முக்கிய காரணமாக விளங்குவது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி. அங்கு வருடத்தில் ஒரு முறைஏதோ ஒருஅணிஅகில இலங்கை சம்பியனாக வரும். அத்துடன் மன்னார் தீவிலும் இதே நிலை உண்டு.

இதன் ரகசியம் என்னவென்றால் அக் கல்லூரியில் உதைப்பந்தாட்ட பயிற்சியாளருக்கான தகைமைச் சான்றிதழ் பெற்ற இரண்டு ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதும் அதைவிட பாடசாலை முதல்வர் முன்னாள் யாழ். பல்கலைகழக உதைபந்தாட்ட வீர், என்பதுடன் மன்னார் சமூகம் உதைப்பந்தாட்டத்தை உயிரில் ஓர் அங்கமாகக் கொண்டுள்ளமை.


சவேரியார் கல்லூரி 13 வயது கால்பந்து அணி

இவைகளே மன்னாரின் உதைப் பந்தாட்ட வளர்ச்சியின் இரகசியமாக உள்ளன.

மேற்போன்ற காரணிகள் யாழ்ப்பாணத்திலோ அன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவிலோ கிடையாது திருகோணமலையில் ஓரளவுக்கு இருந்தாலும் முழுமையாக இல்லை. ஆகவே தொழில் நுட்ப ரீதியாக வளர்ச்சி

# மன்னாரின் மகத்துவம்

அடைந்தவர்கள் பொருளாதார ரீதியாக சமூகத்தை தாங்குபவர்கள்.அதாவது இருக்கும் வளங்களை கொண்டு திட்டமிட்டு பயன்படுத்துபவர்கள் இருப்பதால் மன்னார் உதைப்பந்தாட்டத்தில் சிறப்பாக பிரகாசிக்க முடிகின்றது.எனவே எமது ஒட்டுமொத்த சமூகம்இவற்றை முன்மாதிரியாக கொள்ள வேண்டும். அப்படியானால் அந்த இலக்கைஎங்களால் நிச்சயமாகஅடையமுடியும்.

தமிழீழ வியைாட்டுத்துறை ஏற்கனவே தமிழர் தாயகத்தின் முதன்மை விளையாட்டாக உதைபந்தாட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழ்களாகிய நாங்கள் இலங்கையில் அல்லது சர்வதேசத்தில் சாதிக்க வேண்டும் எங்களை அடையாளப்படுத்த வேண்டும் என்பதற்கு ஓர் ஊடகமாக உதைபந்தாட்டம் அல்லது கபடி அல்லது மெய்வல்லுனர் போடிகள்தான் அமையப்போகிறது.எனவே இந்த விளையாட்டுக்களை முதன்மை விளையாட்டாகவும் ஏனைய விளையாட்டுக்களை எங்களுக்குரிய துணை விளையாட்டுக்களாகக் கொண்டு அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டும்.

சாதனைகள் என்பது இரண்டு நாட்கள் அல்லது இரண்டு மாதம் அல்லது குறிக்கப்பட்ட நாட்களுக்குள் மட்டும் நிகழ்த்தப்பட்டுகின்ற, அடையப்படுகின்ற ஒரு'நிகழ்வல்ல.அவை பொருத்தமானவர்களை அடையாளங் கண்டு வழிநடத்துவதிலேயே தங்கியுள்ளது இதில் சற்று முன்னேற்றமும் கண்டுள்ளது.

இந்தவகையில் எமது தேசம் மெய்வல்லுனர் துறையிலும் உதைப்பந்தாட்டத்திலும்முன்னேற்றம் கண்டு வருகின்றது.இதற்குஅண்மையில் தமிழீழ விளையாட்டுதுறையும் இளையோர் செயற்பாட்டு நிறுவனமும் இணைந்து நடாத்திய தாயக வீரர்கள் கௌரவிப்பு முன்னோடியாகவும் உந்து சக்தியாகவும் அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

— கண்ணன்

---

# கால்பந்தின் கதாநாயகன்

உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் யார் என்றால் அது மறு பேச்சின்றி பேலே என்பவரையே கூறலாம். எனினும் தற்போது சிறந்த வீரர் யார் என்பதை தெரிவு செய்வதில் பல சிக்கல்கள் தோன்றுகின்றன.காரணம் காலத்துக்கு காலம் சிறந்த வீர்கள் உருவாகி வருவதாகும்.

அந்த வகையில் கடந்த வருடம் ரொனால்டோ, டேவிட் பெக்காம், மைக்கல் ஓவன் ஆகிய வீரர்களை முந்திக்கொண்டு சிறந்த வீரர் என்ற பெருமையை பிரேசில் வீரர் ரொனால்டினோ பெற்றுக்கொண்டார்.

உலகிலுள்ள உதைப்பந்தாட்ட சம்மேளனங்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இவர் 620 வாக்குகளைப்பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு அடுத்ததாக தியரிகென்றி 552 வாக்குகளைப்பெற்று இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டார்.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா அணிக்காக ஆடும் ரொனால்டினோவின் திறமை காரணமாக லீக் போட்டிகளில் பார்சிலோனா அணிக்கு அதிக போனஸ் புள்ளிகள் கிடைத்துள்ளன.

ரொனால்டினோ 1980 ஆம் ஆண்டு பிரேசிலில் போர்ட்டோ அலிக்றே என்ற இடத்தில் பிறந்தார். அவரின் முழுப்பெயர் ரொனால்டினோடி ஐஸ் மொறைரா வாகும். வறிய குடும்பத்தில் பிறந்த அவரின் தந்தையே அவரின் குருவாக இருந்தார். அவரும் சிறு விளையாட்டு கழகம் ஒன்றின் வீரராவார். ரொனால்டினோ முதன் முதல் 1997ஆம் ஆண்டு எகிப்தில் நடை பெற்ற 17 வயதுப்பிரிவு உலகக் கிண்ணப்போட்டியில் பங்கேற்றதுடன் சர்வதேச உதை பந்தாட்டத்தில் இணைந்தார். 10வது இலக்க சீருடையுடன் களம புகும் இவ[illegible] அண்மைய சில வருடங்களாக சிறந்த வீரராக மிளிர்கிறார்.



இவரின் திறமையின் மதிப்பை. புரிந்து கொண்ட பிரபல நிக் விளையாட்டு ஆடைத்தயாரிப்பு நிறுவனம் இவருக்கு 24 கரட் தங்கத்திலான ஒரு சோடி காலணிகளை அன்பளிப்பாகவழங்கியு[illegible]ளது. அந்தவகையில் தங்கக்காலணிய[illegible] களம் இறங்கும் ஒரே வீர் ரொனால்டி[illegible]

— வடிவேல்

# பாதகத்தை ஏற்படுத்தக் கூடிய செயல்களை தமிழ் மக்களுக்கு ஜே.வி.பி செய்கின்றது

## ரணிலின் பிரச்சாரக் கூட்டத்தில் இ.தொ.கா

(கொழும்பு)

தமிழ் மக்களுக்குப் பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து செயல்களையும் ஜே.வி.பி மேற்கொண்டு வருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது. பேச்சுவார்த்தைக்குத் தடையை ஏற்படுத்துவதுடன், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் சென்று சேர்வதற்கான வழிகளையும் அது தடுத்து விட்டதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்று முன்தினம் மாத்தளை ரத்தோட்டையில் நடைபெற்றது. இதன்போது பங்கேற்று உரையாற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் எம் எஸ் செல்லச்சாமி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

ஜே.வி.பி இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை தமது பிடிக்குள் வைத்துள்ளது. இந்த நிலையில் அந்தக் கட்சியின் ஆலோசனைகளுக்கு மகிந்த ராஜபக்ஷ உடன்பட்டு செல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆட்பட்டுள்ளார். இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இதனை முன்வைத்தே மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக எம். எஸ்.செல்லச்சாமி குறிப்பிட்டார். ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்தத்தை முன்கொண்டுவந்த அதேநேரம் சமாதான சூழ்நிலைக்கும் வழிவகுத்தார். இந்த நிலையில் இந்த சமாதானம் நிலைபெற எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி தீர்க்கமான நாள் என செல்லச்சாமி குறிப்பிட்டார். (32)

# தேர்தல் வன்முறைகளுக்கு பாதாளக் குழுக்கள் முயற்சி

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் வன்முறைகளை ஏற்படுத்துவதற்கென கட்சிகளின் சில அமைப்பாளர்கள் பாதாள உலக கோஷ்டியினரை பயன்படுத்தப் போவதாக பொலிஸ்புலனாய்வுப் பகுதியினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுடன் இணைந்து சனாதிபதித் தேர்தலின்போது வன்செயல்களையும் கொலைகளையும் புரிவதற்கு இவர்கள் திட்டமிட்டுள்ளனர் எனவும் கொழும்பு முகத்துவாரம், கடுவெல, பொரல்ல போன்ற இடங்களிலுள்ள பாதாள கோஷ்டியினர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர் எனவும்பொலிஸ் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# காஸ் சிலிண்டரில் கசிவு: 9 இராணுவத்தினர் பாதிப்பு

மாதம்பையில் குளோரின் காஸ்சிலிண்டரில் ஏற்பட்ட வாயுக் கசிவினால் ஒன்பது இராணுவத்தினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிலிண்டர் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த நீர்வழங்கல் திட்டத்திற்காக தருவிக்கப்பட்ட தென சிலாபம் பிரதேச சபைத்தலைவர் தெரிவிக்கின்றார். இந்தக் காஸ்சிலிண்டர் லவன் பிரதேசசபை மாதம்பை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தின் பின்னர்அந்த வாயுக்கசிவைத் தடுப்பதற்கு காஸ்சிலிண்டர் மண்ணினால் மூடப்பட்டது.

# ஜே.வி.பி.யின் தேர்தல் அலுவலகங்களை உடனடியாகமூடும்படி பொலிசார் உத்தரவு

## –குழப்பத்தில் ஜே.வி.பி

(கொழும்பு)

ஜே.வி.பியினது சகல தேர்தல் அலுவலகங்களையும் மூடும்படி பொலிசார் உத்தரவிட்டதை அடுத்து ராஜபக்ஷவுக்கு ஆதரவு கோரும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல்பிரச்சார நடவடிக்கைகள் பாரிய பிரச்சினைகளைச் சந்தித்துள்ளது. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 73 ஆவது சரத்தின் படி ஒரு வேட்பாளர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் ஒரு மத்திய தேர்தல் அலுவலகத்தையும் ஒரு கிளை அலுவலகத்தையுமே வைத்திருக்க முடியும் என்றஅடிப்படையில் இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின்படி ஐ.தே.க, ஐக்கியமக்கள் முன்னணி, ஏனைய கட்சிவேட்பாளர்கள் ஆகியோரை ஆதரிக்க ஒவ்வொரு தேர்தல்மாவட்டத்திலும் ஒவ்வொரு மத்திய அலுவலகமும் ஒவ்வொரு கிளை அலுவலகமும் வைத்திருக்க முடியும் என பொலிசார் தெரிவித்தனர். இதன்படி பிரதமருக்குஆதரவு தெரிவிக்கும் அரசியல் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டபல மாவட்டங்களிலுள்ள ஜே.வி.பி அலுவலகங்கள் கடந்த வெள்ளியன்று மூடப்பட்டன. சில மாவட்டங்களிலுள்ள ஜே.வி.பி அலுவலகங்களை மூட அவர்கள் கால அவசாசம் கேட்ட போதும் பொலிஸ் தரப்பு இது பிரச்சினைகளை ஏற்படுத்தும் என மறுத்துவிட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குமாரி கூரே விவகாரம், ஹக்கீமிடம் பொலிசார் விசாரணை

(கொழும்பு)

குமாரி கூரே தற்கொலை தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிசார் விசாரணை நடத்தவுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதி ஹக்கீம் தன்னைத் தாக்கியதாகக் குமாரி கூரே பொலிசாரிடம் புகார் கூறியிருந்தார். இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை ஹக்கீமின் இல்லத்தில் குமாரிகூரே தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக ஹக்கீமிடம் விரைவில் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிசார் விசாரணை நடத்தக் கூடும் என்று கூறப்படுகிறது.

இதனிடையே குமாரி கூரேயின் தற்கொலை தொடர்பாக கொழும்பு மரண விசாரணை அதிகாரி எவ்ட் அஹங்கம முன்பாக ஹக்கீமின் இல்ல தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் பட்டானி மகேந்திரன் இச்சம்பவம் குறித்து விளக்கமளித்துள்ளார்.


மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய்,சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு

பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)
விமான நிலைய பொதி சுமப்பவர் (PORTER)
விமான நிலைய சுத்திகரிப்பு (CLEANING WORK)
கட்டட தொழிலாளர்கள் (LABOURER)
ஷட்டரிங் வேலை அனுபவம் கொண்டதச்சுத் தொழிலாளர்கள் (SHUTTERING CAR PENTER)
மேசன்மார் (MASON)
மாபிள் கல் பதிக்கும் அனுபவம் வாய்ந்த மேசன்மார் (MARBLE/TILES MASON)
மின் இணைப்பாளர்கள் (ELECTRICIAN)
உருக்குப் பொருத்துநர்கள் (STEEL FIXER)
பிளம்பர்மார் (PLUMBERS)
சுவர்வர்ணம் தீட்டுவோர். (WALL PAINTER)

தொடர்புகளுக்கு

RAIN BOW TRAVELS & TOURS
321/2 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில் Tel: 0777,328219 – 0212223237

(சி. 13015)



G.C.E. A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் புக முடியாதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

City&Guilds International London (UK)
நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற.

- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering

ஆகிய துறையில் பொறியியல் வகுப்புகள் கொழும்பில உள்ள APPS International Net Work (PvT) LTD ஆல் நடாத்தப்படுகின்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 16.10.2005

Note:- Advaece Diploma தராதரத்துடன் Charted Engineer, Gradaate Diploma நேரடியாகப் பயிலலாம். அத்தோடு London பல்கலைக்கழகங்களில் 2ஆம் வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07,பலாலிவீதி,யாழ்ப்பாணம்.
Regd no-15251 T.P.021-2223335.

(சி-13021)



MEDICINE IN RUSSIA

SMOLENSK STATE MEDICAL ACADEMY
DOCTOR OF MEDICINE (MD)
MAIN SUBJECTS IN ENGLISH
*Internationally Recognized, Including British. Srilanka Medical Council and W.H.O*
*2000 US $ Per annum (6 Years)*

குறைந்த கட்டணத்தில் கற்பதற்கும், A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கும் அரிய சந்தர்ப்பம்

**Admission,** மற்றும் மேலதிக தகவல்களை சிரேஷ்ட மருத்துவ மாணவர்கள் மூலம் நேரடியாகப்பெற்றுக்கொள்ளலாம்.

T. THULASY 0785263960
SMOLENSK FRIENDSHIP MEDICAL ASSOCIATE

NO.33,Rudra Mawatha,
Wellawtta

672 K.K.S ROAD
Nachchimarkovillady
Jaffna 021-2222536.

தமிழ் மாணவர்கட்கு சிறந்த வாய்ப்பு

குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே அனுமதி

(சி.12898)



கிளி/நுண்கலைக்கல்லூரி மாணவர் மன்றம் நடாத்தும்

வாணிவிழா




இடம்:– கிளி நுண்கலைக்கல்லூரி கேட்போர் கூடம்
காலம்:– 12.10.2005 புதன் மாலை 3.30
நிகழ்ச்சிகள்:– மாணவர்களின் தாளவாத்தியக் கச்சேரி,இசை அரங்குகளுடன் இசைக்கலைமணி திரு. சு. கோபிதாஸ் அவர்களின் வயலின் கச்சேரி என்பன இடம்பெறும்.

குறிப்பு:– புதிதாக இணைய விரும்பும் மாணவர்களையும் நுண்கலைக் கல்லூரி மாணவர்களையும் நாள் வகுப்பிலும் வாணி விழாவிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சிவசக்திகுமார்,
தலைவர்,
மாணவர் மன்றம்,
கிளி. நுண்கலைக்கல்லூரி

(சி.13023)

# நீதிமன்றத் தீர்ப்பை அறியாமல் பதவி விலகக் கோருவது தவறு

## பா.ஜ. தலைவர் அத்வானி




(புதுடில்லி)

பீகார் சட்டசபை கலைப்பு சட்ட விரோதம் என்று உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. தீர்ப்பின் முழு விபரத்தை அறியாமல், பிரதமர்மன்மோகன்சிங் பதவி வலக வேண்டும், சனாதிபதி அப்துல் கலாம் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் எனச் சொல்லுவது தவறு'' என பாரதிய ஜனதாத் தலைவர் அத்வானி திட்டவட்டமாக தெரிவித்தார்.

இமாச்சலப் பிரதேச மாநிலம் பாலம்பூரில், பா.ஜ கட்சிக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்குப் பின் நிருபர்களிடம் அத்வானி கூறுகையில்,

பீகார் சட்டசபை கலைப்பு சட்ட விரோதம் என்று நீதிமன்றம் கூறியுள்ளது. இது மத்திய அரசுக்கு நீதிமன்றம்வழங்கிய நேரடி கண்டனம். இதற்குமுழுப்பொறுப்பு உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல்தான். அவா பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். இதுவரை தவறுக்கு யாரும் பொறுப்பேற்று இராஜினாமாச் செய்யவில்லை.யாரையும் பதவியிலிருந்து மத்திய அரசு நீக்கவில்லை. இந்தப்பிரச்சினையில் பட்டேலுக்கு தான் நேரடி தொடர்பு உள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரங்களை முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல், பிரதமர் மன்மோகன்சிங் பதவி விலக வேண்டும் என்றுசொல்வது தவறு என்று தெரிவித்தார்.



*காஷ்மீரில் பூகம்பத்தில் காயமடைந்த ஒருவரை சிகிச்சைக்காக கொண்டு செல்கின்றனர்.*

# அரசாங்கத்தை கேள்வி கேட்பதாக புத்திரிகைகள் இருக்க வேண்டும்

## சோனியா காந்தி



(புதுடில்லி)

"பரபரப்பை ஏற்படுத்துவதற்காக தேவையற்ற, அர்த்தமற்ற விடயங்களை மக்களிடையே பத்திரிகைகள் கொண்டு செல்லக் கூடாது . ஒரு சிறந்த பத்திரிகையின் பணியானது, அரசின் செயற்பாடுகள் குறித்து கேள்விகள் கேட்கக் கூடியதாக இருக்க வேண்டும்", என காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி தெரிவித்தா.

டில்லியில் 'அவுட்லுக்' வார பத்திரிகையின் சார்பில் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

எந்த விடயங்களையும் விரிவாகத் தெரிவிக்க வேண்டும். பரபரப்பான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் புதிய வாசகர்களைப் பெற முடியாது. மாறாக, அவை படிப்பவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியதாகவே இருக்கும். சுதந்திரமாகத்தனது கருத்தைத்தெரிவிக்கும் போது அதில் பொறுப்புணர்வு இருக்க வேண்டும். உண்மையில் எப்போதும் முரண்பாடு இருக்காது. அதேசமயம், வதந்திகள் உண்மையல்ல. கிசுகிசுக்கள் செய்திகளாகாது. எனத் தெரிவித்தார்.

# இமயமலை பகுதியில் பாரிய பூகம்பம் ஏற்படும்

## அமெரிக்க பூகம்பவியல் நிபுணர் எச்சரிக்கை

(புதுடில்லி)

இமயமலைப் பகுதியில் பாரிய பூகம்பம் ஏற்படும் என்று அமெரிக்க பூகம்பவியல் நிபுணர் எச்சரித்துள்ளார்.இமயமலைப் பகுதியில் இரண்டு இலட்சம் மக்களை கொல்லக் கூடிய கடுமையான பூகம்பம் ஏற்படும் என்று இந்திய-அமெரிக்க பூகம்பவியல் நிபுணர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்து இருந்தனர்.அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சர்வதேச பூகம்பவியல் நிபுணர் ரோஜர் பில்ஹாம் இது தொடர்பாகக் கூறுகையில்;

ஆசியாவை தாங்கும் பூமித்தகடுகளுடன், இந்தியாவைத் தாங்கும் பூமிதட்டு நான்கு கோடி ஆண்டுகளுக்கு முன்பு பலமாக மோதியது. அதனால்தான் இமயமலை உருவானது.

அப்போது முதல் ஆசிய பூமிதட்டை நோக்கி இந்திய பூமித்தட்டு ஆண்டுக்கு நான்கு சதவீதம் என்ற அளவில் நகர்ந்து வருகிறது. இதனால் இந்திய தட்டில் பல விரிசல்கள் ஏற்பட்டு பூமியில் அழுத்தம் உருவாகி இருக்கிறது.

பெரிய பூகம்பங்கள் ஏற்படுவதன் மூலமே இந்த அழுத்தம் வெளியாகும். இமயமலையில் சில இடங்களில் ரிச்டர் அளவில் எட்டு அளவுக்கு பூகம்பம் ஏற்படும்.


இமயமலைப் பகுதியில் பூமி விரிவடைந்து வருகிறது. கிழக்கு பூமி தட்டு மியான்மர் பகுதியில் இருந்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பலுகிஸ்தான் பகுதிகளை நோக்கி நகருகிறது.

இந்தப் பகுதியில் 12 இடங்கள் பூகம்ப அபாய பகுதிகளாகக் கண்டறியப்பட்டு இருக்கின்றன. இந்தப் பகுதியில் எதிர்காலத்தில் பல பெரிய பூகம்பங்கள் ஏற்படும்.

கடந்த நூற்றாண்டில் முதல் 50 ஆண்டுகளில் 7.5 முதல் 8.5 ரிச்டர் அளவிலான மூன்று பூகம்பங்கள் ஏற்பட்டன.அடுத்த 50 ஆண்டுகள் இந்தப் பகுதி அமைதியாக இருந்தது.

300 முதல் 800 கிலோ மீற்றர் நீளம் உள்ள கார்வால் குமான் இமயமலைப் பகுதியில் இதுவரை பூகம்பம் ஏற்படவில்லை. மத்திய இமயமலையின் இடைவெளி என்று அழைக்கப்படும் இப்பகுதி விரைவில் பெரிய பூகம்பத்தைச் சந்திக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

டில்லியில் விமானப் படையின் 73 ஆவது ஆண்டு தினம் கடந்த சனிக்கிழமை கொண்டாடப்பட்டது வானில் சாகசம் செய்யும் விமானப்படையினர்.



# சினிமாவில் புகைப்பிடிக்கும் காட்சிக்கு சனவரி முதல் தடை விதிப்பு

## இந்திய மத்திய மந்திரி அன்புமணி

(புதுடில்லி)

"சினிமாவில் புகைப்பிடிக்கும் காட்சிக்கு சனவரி முதலாம் திகதி முதல் தடை அமுல்படுத்தப்படும்'' என்று இந்திய மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி கூறியுள்ளார்.

எயிட்ஸ் நோய் பரவாமல் தடுப்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியம். எயிட்ஸ் நோய். பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி தகவல்கள் சமுதாயத்திற்கு குறிப்பாக இளை ஞர்களுக்குக் கிடைக்க வேண்டும். எனவே இளைஞர்களை இலக்கா கக் கொண்டு டில்லியில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நடத்தப்படும்.

பல்கலைக்கழகங்கள்,கல்லூரிகள். கிராமங்கள் போன்றவற்றில் பிரச்சாரம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சார முகாம்களில் நானும் பங்கேற்கிறேன். கல்லூரிமற்றும் பள்ளி அளவில் பிரச்சார முழக்கங்கள் எழுதும் போட்டிகள் நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

# பூகம்பத்தில் பலியானவர்களின் 600 சடலங்கள் காஷ்மீரில் மீட்பு

(புதுடில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் பூமி அதிர்ச்சியில் பலியான 600 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. இதன் எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணிகளில் பாதுகாப்புப் படையினரும், இராணுவ வீரர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இடிபாடுகளில் சிக்கி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களில். படுகாயமடைந்தவர்கள் விமானம் மூலம் கொண்டுவரப்பட்டு சிறிநகரில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுக்கான மருந்து மற்றும் நிவாரணப் பொருட்கள் சிறிநகரில் இருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.


# உதவி கோருகிறார்



கடுமையான இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு அளம்பில் இடைத்தங்கல் முகாமைச் சேர்ந்த இருதயநாதன் இருதய பிரகாஷ் தனது சத்திர சிகிச்சைக்காக கருணையுள்ள முடையோரிட மிருந்து உதவியை எதிர்பார்க்கிறார்.

ஆபத்து மிக்க இருதய நோயால் பீடிக்கப்பட்டுள்ள இவருக்கு இருதய சத்திரசிகிச்சை 27.10. 2005 இல் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என " அப்பலோ " வைத்தியசாலை மருத்துவர் சிவகுமார் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இச்சிகிச்சைக்கு ஆறு இலட்சம் ரூபா தேவைப்படுவதனால் இருதயபிரகாஷ் கருணையுள்ளமுடையவர்களிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கிறார். உதவ விரும்புவோர் வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கியிலுள்ள 90670956 எனும் இலக்க இந்திராணி இருதயநாதனின் கணக்கில் வைப்புச் செய்யவும். அல்லது இலங்கை வங்கி S/A24166 எனும் இலக்கத்தில் வைப்புச் செய்யவும்.

(6831)



## கணனி அறிவுள்ள அலுவலக நிர்வாகப் பணிப்பாளர் கிளிநொச்சி செய்தி நிறுவனத்திற்குத் தேவை

தகைமை*:A/L சித்தி
* Ms Office
* Photo shop அனுபவம்
*தட்டச்சு வேகம் வரவேற்கத்தக்கது
*ஆங்கில அறிவு வரவேற்கத்தக்கது

படப்பிடிப்பு துறையில் ஆர்வம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங் கப்படும்.

விண்ணப்பத்துடன் A/L உட்பட சகல சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பங்களை 16.10.2005 இற்கு முன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

வீள.இல 13058
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

(சி.13058)

# இழுபறி நிலையில் கரைச்சிப் பிரதேச காற்பந்துப் போட்டி

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கரைச்சிப் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட கால்பந்து போட்டிகள் நேற்று ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்ட போதும் நடைபெறாததால் வீரர்கள், ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

கடந்த மாதம் நடைபெறுவதாக இருந்த இப்போட்டித் தொடர் பல்வேறு காரணங்களால் பிற்போடப்பட்டது. ஒருவாறு நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டபோதும் நடைபெறாமல் போனமை வீரர்கள், ரசிகர்கள் இடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, கழகங்களுக்கு வழங்கப்பட்ட போட்டி அட்டவணைப்படி இன்றைய போட்டிகள் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# தோழர்கள் அணி சம்பியன்



உடையார்கட்டு சுதந்திரபுரம் லெப்.கேணல் நிரோஜன் விளையாட்டுக் கழகம் நிரோஜன் ஞாபகார்த்தமாக நடாத்திய மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் தோழர்கள் அணி சம்பியனானது.

கடந்த சனியன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் கடற்புயல் அணியைத் தோழர்கள் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

முதலில் ஆடிய தோழர்கள் அணி 105 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்மேந்திரா 33 ஓட்டங்களையும், சீலன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய கடற்புயல் 10.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று 63 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் துஷ்யந்தன் பத்து ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிவா நான்கு விக்கெட்டுக்களையும், பிரியதர்சன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# யாழ். இந்துக் கல்லூரி, கிளி. ம.வி. மோதும் கடினப்பந்து போட்டி நாளை

கிளிநொச்சி மகாவித்தியாலய 13 வயது கடினப்பந்து அணியினருடனான போட்டியில் கலந்து கொள்ள யாழ். இந்துக் கல்லூரியின் 13 வயதுப் பிரிவு அணி கிளிநொச்சிக்கு வருகைதர வுள்ளது.

மேற்படி அணி நாளை கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள 30 ஓவர்கள் கொண்ட போட்டியில் பங்கேற்கவுள்ளதாக கிளிநொச்சி மகாவித்தியாலய அணியின் பயிற்றுவிப்பாளர் அலன் தெரிவித்துள்ளார்.



# ஆசிய மண்ணிலும் அசத்தல் வெற்றிபெற ஆசையாய் உள்ளார் மைக்கேல் வோன்



மைக்கேல்வோன்.

பாகிஸ்தான், இந்தியா சுற்றுப்பயணத்திலும் வெற்றிகளை குவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கேல்வோன்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு இந்திய அணியுடன் இரண்டு தொடர்களிலும் மோதவுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றி நடைபோட்டு வரும் இங்கிலாந்து அணி இந்த இரண்டு தொடர்களையும் சவாலாகவே எண்ணி வருகின்றது. சொந்த மண்ணில் இருவரும் ஜாம்பவான்கள் என்றாலும் இளம் வீரர்கள் சாதிப்பார்கள் என்கிறார் இங்கிலாந்து தலைவர் மைக்கேல்வோன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இங்கிலாந்து அணி எதிர்த்த அணிகளையெல்லாம் வீழ்த்தி தொடர் வெற்றிகளை பெற்று வருகிறது இது அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தொடர வேண்டும் என்பதே எனது விருப்பம். இளம் வீரர்களைக் கொண்ட எங்கள் கூட்டணி இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கும் என்பதால் இது எளிதில் சாத்தியமாகும். எங்களின் சாதனைப்பாதைகளுக்கு தனிப்பட்ட முறையில் எந்த வீரரையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அனைவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இது வரை விளையாடிய போட்டிகளில் செய்த தவறுகளை திருத்திக் கொள்ள முயல்கிறோம். இப்போது எங்களுக்கு இரண்டு முக்கிய சவால்கள் காத்திருக்கின்றன. முதலில் பாகிஸ்தான் மண்ணில் தொடரை வெல்ல வேண்டும். அடுத்ததாக இந்திய சுற்றுப்பயணத்திலும் சாதிக்க வேண்டும். இந்த இரண்டு பயணங்களிலும் முத்திரை பதிக்க எங்கள் கூட்டணி தயாராகி விட்டது என்று தன்னம்பிக்கையுடன் பேசுகிறார் மைக்கேல் வோன்.

# உலகக் கிண்ண தகுதிகாண் கால்பந்துப் போட்டி பிரேசில்- பொலிவியா ஆட்டம் சமனிலையில்



உலகக் கிண்ண தகுதிகாண் உதைப் பந்தாட்டப் போட்டியில் பொலிவியா வுடன் நடந்த பந்தயத்தில் உலக சம்பியன் பிரேசில் ஒன்றுக்கு ஒன்று என்ற கோலைப் பெற்று சமனிலை பெற்றது.

ஏற்கெனவே தகுதி பெற்றிருந்த போதும் பொலிவியாவுடனான இப்போட்டியில் கடுமையாகப் போராடி போட்டியை சமன் செய்துள்ளது. இப்போட்டியில் மிலான்கழக வீரர் அட்றியானோவும், றியல் மட்றிட்டின் றொபின்கோவும் பங்கேற்றனர்.

புவனர்ஸ் அயர்சில் நடந்த இன்னுமொரு போட்டியில் ஆர்ஜென்டீனா, பெருவை இரண்டுக்கு பூச்சியம் என்ற ரீதியில் வென்றுள்ளது. இளம் வயது வீரரான லயன்ஸ் மெசி 78 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் போட்டார். அடுத்து கார்லோஸ் டிவஸ் ஒரு கோலை அடித்தார்.




# சுப்பர் சீரிஸ் தோல்வி ஏமாற்றம் அளிக்கும் ஒன்று

அவுஸ்திரேலியா அணியுடனான சுப்பர்சீரிஸ் தொடரில் பாரிய தோல்வி கண்டமை பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக உலக பதினொரு பேர் அணித்தலைவர் ஷோன் பொலக் கவலை தெரிவித்துள்ளார். மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் இரண்டு போட்டிகளில் தோல்வி கண்டால் இந்த ஏமாற்றம் தவிர்க்க முடியாதது என்று தெரிவிக்கும் அவர் கடைசிப் போட்டியில் வெல்ல வேண்டும் என பெரிதாகக் கூறியபோதும் பிரட்லியின் பந்து வீச்சுத் தாக்குதல் தமது அணியை நிலைகுலைய வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.



- பொலக்

# கிறிஸ் ட்ரம் லெட்டுக்கும் காயம் உடல்தகுதியை நிரூபிக்க வேண்டும்

பாகிஸ்தான் செல்லும் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் காயம் காரணமாக விலக்கப்பட்டுள்ள சைமன் ஜோன்ஸிக்குப் பதிலாக தெரிவு செய்யப்பட்ட கிறிஸ்ட்ரம் லெட்டும் காயத்தினால் அவதிப்படுவதால் அவர் உடல்தகுதியை நிரூபிக்கும் கட்டாயத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிலிருந்து அவர் தவறும் பட்சத்தில் ஜேம்ஸ் அண்டர்சனுக்கு வாய்ப்பளிக்கப்படும். எனினும் அவர்கள் டெஸ்ட் அணிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

ஏற்கனவே ஒருநாள் போட்டிக்கு டர்காம் கழக அணியின் லயன் பிளங்கட் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இதற்கிடையில் இத் தொடருக்கு அனுபவப் பந்துவீச்சு வீரர்களான ஜோன் லூயிஸ், ஜேம்ஸ் [illegible]லி, அண்டிகடிக், ஹைன்சைட் பொட்டம் ஆகியோருக்கு சுழற்சி முறையில் வாய்ப்பளிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நவிட்உல்ஹசன் பந்துவீச்சு எச்சரிக்கையுடன்ஆட வேண்டும்

## பீற்றர் முவர்ஸ்

பாகிஸ்தானுடனான தொடரின்போது இங்கிலாந்து வீரர் நவிட் உல்ஹசனின் பந்துவீச்சில் மிக எச்சரிக்கையுடன் ஆடவேண்டும் என இங்கிலாந்தின் கிரிக்கெட் பயிற்சிக்கல்லூரி பணிப்பாளர் பீற்றர் முவர்ஸ் கூறியுள்ளார்.


நவிட் உல்ஹசன் அண்மையில் முவர்சின் பயிற்சியுடன் சசெக்ஸ் அணிக்காக ஆடி ஒன்பது போட்டிகளில் 54 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். அவர் திறமையான பந்துவீச்சாளர் என்றதுடன் 18வயது இளம வீரரின் துடிப்பு அவரிடம் காணப்படுவதாக முவர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

27 வயதான ஹசன் பாகிஸ்தான் அணிக்காக ஆடி இதுவரை 31 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 55 விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளார். அவர் முன்னாள் வீரர் இம்ரான்கான், வக்கார் யூனிஸ், வசிம்அக்ரம் போன்ற வீரர்களுக்கு சமனானவர் என முவர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் தலைவர் காலித் மக்முட் ஓய்வுபெறத் திட்டம்


பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் காலித்மக்முட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது. 34 வயதான இவர் 12 டெஸ்ட் போட்டிகளிலும் 76 ஒருநாள் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளார். இனிமேலும் அணியில் தனக்கு ஒரு நிரந்தர இடம் கிடைக்காது என்ற காரணத்தினாலேயே தான் ஓய்வு பெறத் தீர்மானித்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மக்முட் 1999ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணப்போட்டியின்போது 31 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களைப் பெற்றதுடன் 27 ஓட்டங்களையும் பெற்று பாகிஸ்தான் அணியை 62 ஓட்டங்களால் வெற்றிபெற வழி சமைத்தார்.




ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயத்தில் மின்னல் வேகத்தில் காரைச் செலுத்திய ரெய்கோனன் சம்பியன் பட்டம் வென்றார். இந்த ஆண்டில் இவர் பெறும் ஏழாவது சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



விடுதலை வீரனின் சுயநலமற்ற-பற்றற்ற-வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமானது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக, அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 11.10.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# வன்முறையின் இலக்கு!

வடக்கு-கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அண்மையில் அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்களுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் மீது சிறிலங்கா அரசாங்கத்தரப்பு குற்றம் சாட்டுவதோடு, விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பெரும் எடுப்பிலான பிரச்சார நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகின்றது. இதனால் அது சில அனுகூலங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது எனலாம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுவரும் படுகொலைகளுக்கு நீதி விசாரணைகளோ அன்றி ஆதாரங்களோ இன்றி விடுதலைப்புலிகளைச் சிறிலங்கா இராணுவத்தரப்பும், அரச தரப்பும் குற்றம்சாட்டுவது என்பது புதியதொரு விடயம்அல்ல. இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டவற்றில் ஒருசில கூட ஊர்ஜிதம் செய்யப்பட்டவையாக இருப்பதில்லை.

ஆயினும் சிறிலங்கா இராணுவத்தினரும் அரச தரப்பும் தொடர்ந்தும் இக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துபவையாகவே உள்ளன. இதுமட்டுமன்றி இதன் அடிப்படையில் பாரிய பிரச்சார நடவடிக்கைகளையும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டும் வருகின்றது. இதன்நோக்கம் சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகள் மீது அழுத்தம் கொடுப்பதன்மூலம் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதாகும்.

ஆனால், இவ்வன்முறைகளின் பின்னணியில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையும், இராணுவத்தின் துணைப் படையாக இயங்கும் தமிழ் இனவிரோதக் குழுக்களுமே உள்ளன என்பதே நியாயமாகும். யுத்தநிறுத்தத்தைப் பெரும் அவலத்திற்குள்ளாக்கியுள்ளவர்களும் இவர்களேயாகும். அதாவது சிறிலங்கா அரசாங்கம் தனது புலனாய்வுத்துறை மூலமும், தமிழ் இனவிரோதக் குழுக்கள் மூலமும் ஓர் மறைமுக போரைத் தொடுக்காது விட்டால், தற்போதைய வன்முறைகளுக்கு இடமே இருந்திருக்காது.

அதுமட்டுமன்றித் தற்பொழுது திடீரென அதிகரித்துள்ள வன்முறைகளுக்கு நடைபெறப்போகும் சனாதிபதித்தேர்தல் வடக்கு-கிழக்கில் அமைதியான முறையில் நடைபெறக்கூடாது என்ற நோக்கமும் உள்ளது. வேறுவிதமாகக் கூறுவதானால் தேர்தல் தமிழ்மக்களின் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஆளும் தரப்பு குறியாகவுள்ளது.

தமிழ்மக்கள் இச்சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பார்களா? இல்லையா? என்பது வேறுவிடயம். ஏனெனில் தமிழ்மக்கள் தேர்தல்களில் பெரிதும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். சிங்கள ஆட்சியாளர்கள் யார் தேர்தலில் வெற்றிபெற்றாலும் தமது பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் கிட்டும் என அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

ஆனால் தமிழ்மக்கள் தேர்தலில் வாக்களித்தாலும் வாக்களிக்காது விட்டாலும் அவர்கள் சமாதானத்தின் பால் ஆர்வம் கொண்டவர்களாகவுள்ளனர். ஆட்சிக்கு வருபவர்கள் ஓரளவேனும் சமாதானத்தின் பால் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இதன் காரணமாக சனாதிபதி வேட்பாளர்கள் குறித்து அவர்களிடம் சில கற்பிதங்கள் உருவாக வாய்ப்புண்டு.

ஆனால் தமிழ்மக்களின் இத்தகைய நிலைப்பாடு சிங்கள அரசியல் தலைமைகளினால் இன்று பெரிதும் அலசப்படும் விடயமாகவுள்ளது. இதன் பிரகாரம் சனாதிபதித்தேர்தலில் தமிழ்மக்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவிற்கே கிட்டும் என்ற பொதுப்படையான அபிப்பிராயம் சிங்களவர் தரப்பில் பரவலாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற்றால் நாடு பிரிக்கப்பட்டுவிடும், தமிழருக்கு தனிநாடு வழங்கப்பட்டுவிடும் என மகிந்தராஜபக்ஷ தரப்பினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அதுமட்டுமன்றி ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவை ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளிடம் தமிழீழத்தை ஒப்படைக்கத் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கின்றன.

இத்தகையதொரு நிலையில் தமிழ்மக்கள் தேர்தலில் ஆர்வமற்று இருப்பினும் சிலவேளைகளில் இறுதி நேரத்தில் மனம்மாறி வாக்களித்து விடுவார்களோ என்ற அச்சத்தின் அடிப்படையிலேயே இப்பிரதேசங்களில் அமைதியானதொரு சூழ்நிலை - அதாவது தேர்தலில் தமிழ்மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக் கூடியதானதொரு சூழ்நிலை உருவாகிவிடக் கூடாது என்பதில் ஆளும்கட்சி தீவிரம் காட்டுகின்றது. இதன் விளைவே அண்மையில் வன்முறை மூலம் உருவாக்கப்பட்டுவரும் பதற்றநிலையாகும்.

அதாவது வடக்குக் கிழக்கில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அதிகரித்துள்ள வன்முறைகளுக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணமாகும். இவ்வன்முறைகள் மூலம் உருவாக்கப்படும் பதற்றத்தினால் தமிழ் மக்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது போனால் தமக்கு எதிரான வாக்குகளில் கணிசமாகக் குறைவடையும் என ஆளும்தரப்புக் கருதுகின்றது.

இதேசமயம் இவ்வன்முறைகளுக்கான குற்றச்சாட்டுக்களை புலிகள் மீது சுமத்துவதன் மூலம் விடுதலைப்புலிகள் சனநாயகத்திற்கும், மனித அடிப்படை உரிமைகளுக்கு எதிராகவும் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு மாறாகச் செயற்படுவதாகவும் பெரும் எடுப்பில் பிரச்சாரம் செய்யவும் இது உதவுவதாக இருக்கும். அதாவது ஒரு கல்லில் இரண்டு மாங்காயை அடிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் செயலே இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் தற்பொழுது நிகழும் வன்முறைகளும் இதற்குப்புலிகள் மீது பழிபோடும் செயலுமாகும்.



மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்

# வடக்கு கிழக்கில் பிரச்சாரத்திற்கு வரும் ரணிலின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு

**- பொலிஸ்மா அதிபர்**

(கொழும்பு)

இம்முறை சனாதிபதித் தேர்தல் ஆரம்பிக்கப்படும்பொழுது எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பொலிஸ்மா அதிபர் தீர்மானம் எடுத்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் வடக்கு கிழக்கில் பிரச்சாரங்கள் ஆரம்பிக்கப்படும். இதன்படி வவுனியா, திருகோணமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு ரணில் விக்கிர மசிங்க தீர்மானித்துள்ளார். இப்பிரதே சங்களில் பாதுகாப்பை பலப்படுத் துவதற்கு பொலிஸ் பாதுகாப்புப் பிரிவு தீர்மானம் எடுத்துள்ளது.

# சூறாவளி தோன்றும் அபாயங்கள் அதிகரிப்பு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

இலங்கையில் சூறாவளி ஏற்படும் அபாயம் தென்படுவதாகவும், சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த நிலைமை தோன்றியுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி காரியவசம் எச்சரித்துள்ளார்.

இடியுடன் கூடிய பலத்த மழையும், அதனைத் தொடர்ந்து மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் புயல்காற்றும் வீசும் சாத்தியம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது பெய்துவரும் மழை மேலும் ஒருவார காலத்திற்கு நீடிக்கும் எனவும் கடலுக்குச் செல்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தினுள் நாட்டின் கரையோரப்பகுதிகளில் பெரும்பாலும் கடும் காற்றும் மழையின் காரணமாக பல வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன் ,பாரிய மரங்களும் விழுந்துள்ளன. இதனால் பல இடங்களில் போக்குவரத்துத் தடைகள், மின் துண்டிப்பு ஆகியன இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பொலனறுவை, மொனராகலை, சிலாபம், மாதம்பை ஆகிய இடங்களில் மழை காற்று காரணமாக வீடுகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

# கதிர்காமர் கொலை தொடர்பில் வர்த்தகர் ஞானக்கோன் கைது!

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தமிழ் வர்த்தகர் சார்ள்ஸ் ஞானக்கோன் நேற்று திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார். தெகிவளை நிக்கோபே பிரதேசத்தில் அவர் தங்கியிருந்த வீட்டை நேற்றுக் காலை இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். அந்த வீட்டிலிருந்த சார்ள்ஸ் ஞானக்கோனைக் கைது செய்து கல் [illegible] பொலிசாரிடம் ஒப்ப[illegible]த்தனர்.

நீதவான் முன்னிலையில் ஞானக்கோன் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர் தனது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. ஞானக்கோனை தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## அபயபுர காவலரணில் அதிகாரியைச் சுட்ட சிப்பாய்

திருகோணமலை மாவட்டம் அபயபுரவில் நேற்று திங்கட்கிழமை காலை காவலரணில் இருந்த இராணுவச் சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டில் இராணுவ அதிகாரியொருவர் காயமடைந்துள்ளார்.

அபயபுர இராணுவ முகாம் முன்னணி காவலரணில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் லெட்டினன்ட் வி.பி மித்திரபால என்ற அதிகாரி காயமடைந்தார்.

குறிப்பிட்ட அதிகாரியின் நடமாட்டத்தில் சந்தேகம் ஏற்பட்டதாகவும் ஆள் அடையாளம் தெரியாமல் தான் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகவும் உப்புவெளி பொலிசாரிடம் அளித்துள்ள வாக்குமூலத்தில் அந்த இராணுவச் சிப்பாய் தெரிவித்துள்ளார். தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# வெள்ளவத்தை குண்டுவெடிப்பு தொடர்பில் 40 பேரிடம் விசாரணை 10 பேர் காவலில்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள தினமுரசு அலுவலகம் அருகே இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை 40 பேரிடம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிசார் விசாரணை நடத்தியுள்ளனர்.

இவர்களில் பத்துப் பேர் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளவத்தை குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளசின் ஆதரவாளரான ஜெயராஜின் வாகனம் முற்றிலும் சேதமடைந்தது இருவர் படுகாயமடைந்தனர்.

வெடித்த குண்டு தொடர்பான ஆய்வறிக்கைக்காக காத்திருப்பதாகவும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

# சந்தேகத்திற்கிடமான மரணம் என்பதற்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை

**-குமாரி கூரேயின் மரணம் குறித்து-பொலிசார்**

(கொழும்பு)

குமாரிகூரேயின் மரணம் சந்தேகத்திற்கிடமான மரணம் எனக் கூறக்கூடிய எவ்வித சாட்சியங்களும் இல்லை என்று கொழும்பு பொலிஸ் குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர் சரத் லூகொட தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள ரவூப்ஹக்கீமின் வீட்டிற்கு முன்னால் கடந்த ஆறாம் திகதி அதிகாலை 3.00 மணியளவில் குமாரிகூரே என்ற பெண் தன்னைத்தானே தீமூட்டி தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடமும் சம்பவம் இடம்பெற்ற நாளில் அவரின் வீட்டில் பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளிடமும், வாயில் காப்பாளரிடமிமும், குமாரிகூரே வந்த முச்சக்கரவண்டிச் சாரதியிடமும் கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர். இவர்களின் வாக்குமூலங்களுக்கு அமையவும், மரண பரிசோதனை அறிக்கைக்கு அமையவும் இதுவரை இந்த மரணம் சந்தேகத்திற்கிடமான மரணம் எனக் கூறக்கூடிய எவ்வித சாட்சியங்களும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இ.தொ.கா ரணிலை ஆதரித்தது தற்கொலையா?

# மங்கள சமரவீர பொறுத்திருந்து பார்க்கட்டும்

## -ஆறுமுகம் தொண்டமான் பதில்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எடுத்த முடிவானது அரசியல் தற்கொலையா? இல்லையா? என்பதை மங்கள சமரவீர பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

சனாதிபதித்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரித்தது அரசியல் தற்கொலை என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறியதற்கு இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் கருத்து வெளியிட்ட ஆறுமுகம் தொண்டமான் இ.தொ.கா. எடுத்த முடிவானது அரசியல் தற்கொலையா என்பதை மங்கள சமரவீர பொறுத்திருந்து பார்க்கட்டும். இ.தொ.கா. இல்லாமலேயே மகிந்தராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்று பிரதி அமைச்சர் சூரிய ஆராய்ச்சி கூறியுள்ளார். அதற்கும் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு விடை கிடைக்கும். இரு வேட்பாளர்களிடமும் எமது 19 நிபந்தனைகள் குறித்துப் பேசினேன். ரணில் விக்கிரமசிங்க முழுமையாக நிபந்தனைகளை ஏற்பதாகத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ எமது நிபந்தனைகளை ஏற்றாலும் ஜே.வி.பி. யுடன் அவர் இணைந்திருப்பது ஆச்சரியமளிக்கிறது. ஆயிரக்கணக்கான மலையகத் தமிழ் இளைஞர்களைப் ஜே.வி.பி. படுகொலை செய்தது இன்றும் மலையகத் தமிழர்களை அச்சுறுத்தி வருகிறது. ஜே.வி.பி. ஒரு இனவாதக் கட்சி. ஜே.வி.பி யுடன் இணைந்து இருக்கும் மகிந்த ராஜபக்ஷவால் அமைதி முயற்சிகளில் வெற்றிபெற முடியாது என்றும் தாம் கருதுவதாக ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார். ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடனான மகிந்தவின் கூட்டணியால் மிகுந்த வருத்தமடைந்துள்ளதாகத் தெரிவித்த அவர் தனிப்பட்ட மகிந்த ராஜபக்ஷவால் இந்த நாட்டிற்கு சிறந்த பங்களிப்புச் செய்ய முடியும். ஆனால் ஜே.வி.பி யுடன் இணைந்துள்ள நிலையில் அதையும் மலையகத்துக்கும் மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டுக்குமே மகிந்தவால் எந்தப் பங்களிப்பையும் செய்துவிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (32)

## சுட்டுக்கொலை..

(வயது-43) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளவராகும். கடை ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது அங்கு வந்த இரண்டு இளைஞர்கள் ஒன்பது எம்.எம்.ரக கைத்துப்பாக்கி மூலம் இவரைச் சுட்டுக்கொன்று விட்டு உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## ஆலோசனை...

ஆணையாளர் சந்திக்கவிருக்கும் முதலாவது சந்திப்பு இது.

இச்சந்திப்பின்போது ஒவ்வொரு கட்சிகளும் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து ஆராயப்படவுள்ளது. இதனிடையே தேர்தலுக்கென ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும்படி அரச அச்சகத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக தேர்தல் செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஏதேனும் வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் முறைகேடுகள் நடைபெறுமானால் அந்த இடங்களில் மீண்டும் வாக்களிப்பினை நடத்த வேண்டி ஏற்படும் பட்சத்தில் அதற்கென ஐந்து வீத மேலதிக வாக்குச் சீட்டுக்களை அச்சிடவும் தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் அரச அச்சகத்திற்குள் பாதுகாப்பிற்காக சுமார் 100 பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இம்முறை தேர்தலில் ஒரு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து 27 ஆயிரத்து 160 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

## உலக..

வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் வேலைத்திட்டங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு உலக உணவுத் திட்ட தலைமையகத்தின் பணிப்பாளர் நன்றிதெரிவித்ததுடன் எதிர்கால உலக உணவுத் திட்ட வேலைத் திட்டங்களில் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கும், கர்ப்பிணி பெண்களுக்கும் சத்துணவு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் போல்ஸ்கைற்றிகிரிஸ் றோபசன் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் பற்றி தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களிடம் கேட்டு அறிந்துகொண்டார்.

இச்சந்திப்பில் தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் ,தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராஜா, தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## 2ஆம் லெப்...

தொடர்ந்து தமிழீழவிடுதலைப்புலிகளின் மகளிர் அணிகளின் கனரக ஆயுத அணிகளும் அணிவகுத்து வர தொடர்ந்து ஏனைய மகளிர் அணிகள் அணிவகுக்க, ஊர்திக்குமுன்பாக தமிழீழ பெண்களின் பாண்ட் வாத்திய அணிகளும் ஆண்களின் பாண்ட்வாத்திய அணிகளும் அணி வகுத்துச் சென்றன. இவற்றோடு தமிழரின் பாரம்பரிய நடனக் கலைகளை சித்தரிக்கும் நடனக்குழுக்களின் நடன அணிவகுப்பும் இடம்பெற்றது.

மகளிர் அணிகளின் அணிவகுப்பினைத் தொடர்ந்து பெருந்திரளான பெண்கள் அணிவகுத்துவந்தனர்.

இவ்வாறு வந்த பேரணி ஆண்டான்குளம் மகாவித்தியாலயத்தின் மைதானத்தை வந்தடைந்தது.

மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் மலர்வணக்கத்தினை ஆரம்பித்து வைக்க, அனைவரும் மலர்வணக்கம் செய்ததையடுத்து அரங்கில் கலை நிகழ்வுகளும், நினைவுரைகளும், சிறப்புரைகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ அரசியல்துறை மகளீர் பொறுப்பாளர் தமிழினி மற்றும் போராளிகள் பொதுமக்களெனப் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு தமது உணர்வுபூர்வ எழுச்சியையும் வெளிப்படுத்தினர்.

கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் 2ஆம் லெப்.மாலதி அவர்களின் திருவுருவச்சிலை அமைக்கப் பெற்றுள்ள இடத்தில் நேற்றுக் காலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் நினைவுரைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் மற்றும் கிளி.கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி, கிளி.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் எஸ். கணேசபிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து 2ஆம் லெப். மாலதி அவர்களின் திருவுருவச்சிலைக்கு நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள், போராளிகள் அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மலரஞ்சலி செலுத்தினர்.

2ஆம் லெப். மாலதி அவர்களின் 18ஆம் ஆண்டு நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் விசுவமடு பிரதேசத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது. விசுவமடு மாவீரர் மண்டபம், தருமபுரம் மாவீரர் மண்டபம் ஆகிய இரண்டு இடங்களிலும் காலை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசுவமடு மாவீரர் மண்டபத்தில் முன்னதாக தருமபுரம் மகாவித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை அணி வகுப்புடன் திருவுருவப்படம் விசுவமடு காவல்துறை சந்தியில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டு மலர் வணக்கம் நினைவுரைகள் இடம்பெற்றன.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாள் நிகழ்வு பாடசாலை அதிபர் பங்கயச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

இரண்டாம் லெப்ரினட் மாலதியின் 18ஆம் ஆண்டுநினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கோப்பாய் சந்தியில் இருந்து மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது.

கோப்பாய் சந்தியில் இருந்து திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மாலதியின் நினைவுத்தூபியில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சமூகசேவைகள் மன்றத் தலைவி திருமதி. நவநீதம் ஜெகதீசன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில்

பொதுச் சுடரினை வீரவேங்கை நந்தினியின் தாயார் திருமதி. ஆனந்தர் திரவியம் ஏற்றிவைத்தார் தமிழீழ தேசியக் கொடியினை கரும்புலி மேஜர் கலைமகளின் தாயார் திருமதி. தங்கராசா நாகேஸ்வரி ஏற்றிவைத்தார். ஈகச் சுடரினை வீரவேங்கை ராதையின் தாயார் திருமதி.புவனேஸ்வரி கணேசு ஏற்றிவைத்தார். திருவுருவப்படங்களுக்கான மலர் மாலையை கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. அஞ்சலிதேவி சாந்தசீலன் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் த. விஜயரூபன் ஆகியோர் அணிவித்தார்கள். நினைவுரைகளை யாழ்.பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி. பத்மினி சிதம்பரநாதன் ம.க.ஈழவேந்தன், பொது அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் கனகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினார்கள் .ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். முல்லை.மாவட்டத்தில் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும், இளையோர் மாநாடும் நேற்றுக்காலை 11.00 மணிக்கு முல்லை.மாவட்ட அன்னையர் முன்னணி உறுப்பினர் செல்வி.ச.சகிலா தலைமையில் நடைபெற்றது. (28,33,சோ,ச,20)(41)

# தொண்டமான் - அநுரா இருமணி நேரம் பேச்சு

# பேசப்பட்ட விடயங்களை வெளியிட மறுப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை விசேட சந்திப்பு நடைபெற்றது.

விசும்பாயவில் மிகவும் இரகசியமாக இச்சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் நடந்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இ.தொ.காவின் ஆதரவு அறிவிக்கப்பட்ட பின்னர் ஆறுமுகம் தொண்டமான் எதிரணியின் முக்கிய அமைச்சரை சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின் போது வேறு எவரும் உடன் இருக்கவில்லை. அநுரா பண்டாரநாயக்கவை சந்திப்பதற்காக நுவரெலியாவிலிருந்து ஆறுமுகம் தொண்டமான் அவசரமாகக் கொழும்பு திரும்பியதாகவும் கூறப்படுகிறது.

இச்சந்திப்பில் விவாதிக்கப்பட்ட விடயங்களை ஊடகங்களுக்குத் தெரிவிக்க இருதரப்பினரும் மறுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கத் தூண்டிய நிகழ்வுகள் குறித்து அநுராவிற்கு தொண்டமான் விளக்கியிருப்பதாகவும் தெரிகிறது.

# மட்டு-இல் இயன்மார்ட்டின் க.குழுவுடன் சந்தித்துப் பேச்சு

சர்வதேச மனித உரிமை ஆலோசகர் இயன்மார்ட்டின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைமையகத்தில் மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் சாரிக் தலைமையில் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட அவர், பின்பு சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் இணையத் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின் மாவட்ட இணைப்பாளர் அன்றியா ஜேம்ஸ் அவர்களுடன் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தார்.

பின்னர் புனித செனமிக்கேல் கல்லூரியில் கண்காணிப்புக் குழு அரச தரப்புப் பிரதிநிதிகள், அருட்தந்தை மில்லர் அடிகளாருடன் பேச்சுவார்த்தை நடாத்திய அவர் கண்காணிப்புக் குழுவின் அரச தரப்பு உறுப்பினர்களிடம் மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்து கொண்டார். பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாவலடி, கல்லடி, டச்பார் ஆகிய இடங்களைச் சென்று பார்வையிட்டார்.

## சந்திரிகாவுடன்..

ராஜபக்ஷவின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள், ஜாதிக ஹெலஉறுமய மற்றும் ஜே.வி.பி. யுடன் மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக்கொண்டிருக்கும் உடன்படிக்கைகள் ஆகியவை குறித்து அச்சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் சந்திரிகாவின் அனுமதியைப்பெற்ற பின்னர் இவ்வாரம் தேர்தல் அறிக்கையை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத்தக வல்கள் மேலும் தெரிவித்தன.எதிர்வரும் நாட்களில் நடத்தப்படும் மகிந்தவின் பிரச்சாரக்கூட்டங்கள் சிலவற்றில் தான் கலந்து கொள்வதாகவும் இச்சந்திப்பில் சந்திரிகா உறுதியளித்துள்ளார். வாரியபொலவில் இன்றுநடைபெறும் கூட்டத்தில் சந்திரிகா கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தை...

றேன் உதாரணத்திற்குக் கூறுங்கள் உலகத்தில் இராணுவம் இல்லாத நாடு எது? ஒன்றுமில்லை. இவர்களுக்கு என்ன தெரியும் நாம் இருக்கும் வரை இந்தநாட்டில் இராணு வத்தை இல்லாது செய்யமுடியாது என்றார் நேற்று ஊடகவியலாளரைச் சந்தித்துப் பேசிய அவர் மேலும் தெரிவக்கையில்;

மேலும் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரின் நிலைப்பாடு குறித்து தெளிவாக அறிவிக்கப்படும் வரை எந்தவொரு தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளப் போவதில்லை என்றார்.

இந்தவிடயம் தவிர வேறு எந்த ஒரு விடயம் குறித்தும் நான் மகிந்த ராஜபக்ஷவுடன் பேசப்போவதில்லை. இனப்பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையுமே இன்று இலங்கையில் இருக்கும் முக்கிய பிரச்சினைகள். இந்த இருபிரச்சினைகள் குறித்தும் பிரதமர் தெளிவான விளக்கங்களைத் தராத வரை எந்தவொரு பிரச்சார மேடையிலும் நான் ஏறப் போவதில்லை. இவ்விரு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜே.வி.பி கொண்டுள்ள நிலைப்பாட்டினை ஒரு போதும் நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் இவ்விரு விடயங்கள் தொடர்பில் என்ன நிலைப்பாட்டினைக் கொணடிருக்கிறார் என்றே அறியவிரும்புகிறேன என அநுரா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் பதவியை தனக்கு அளிக்க வேண்டும் என்று எந்த ஒரு உறுதிமொழிக் கடிதத்தையும் தான் கோரவில்லை என்று தெரிவித்துள்ள அநுரா பண்டாரநாயக்க. அடுத்த பிரதமர் வேட்பாளர் என்ற பதவியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தனக்கு வழங்கியுள்ளது. அதனால் பிரதமர் பதவியையோ அமைச்சுப் பதவியையோ வேறொருவரிடம் கேட்டுப் பெறவேண்டிய தேவை தனக்கில்லை என்றும் கூறியுள்ளார்.

## மூன்று...

நிலவ வேண்டும் எனறு தான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் எந்த ஒரு எதிர்பாராத சூழ்நிலையையும் எதிர்கொள்ள இராணுவம் தயாராக உள்ளது. நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய அனுமதி கேட்டுள்ளோம். வளரும் நாடுகளின் எந்த இராணுவத்திற்கும் அடுத்த நிலை இராணுவமாக சிறிலங்கா இராணுவம் இருக்கக்கூடாது என்பதே என் விருப்பம் என்றார் அவர்.

முன்னதாக இராணுவ அதிகாரிகள் மற்றும் படைவீரர்கள் மத்தியில் சாந்த கொட்டேகொட உரையாற்றியபோது அமைதிக்காலத்திலும் யுத்த காலத்திலும் இராணுவம் சிறப்பாக செயற்பட்டுள்ளது.தனது வலிமையை சிறிலங்கா இராணுவம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருக்கிறது. தெற்காசியா முழுமையிலுமே பயங்கரவாதச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். கடந்த இரு தசாப்தங்களாக யுத்தங்களிலும் கடந்த அமைதிச்சூழலை செயற்பாடுகளில் உருவாக்கலாம். ஆனால் மனதளவில் அமைதிச்சூழலை எதிர்கொள்வது கடினமானது. சர்வதேச நாடுகளின் இனப்பிரச்சினைகள் பெரும்பாலானவற்றை அமைதிப்பேச்சுக்களின் மூலமே தீர்வு காணபட்டுள்ளன. அமைதி மற்றும் யுத்த சூழல் இரண்டிற்கும் இராணுவத்தினர் எப்போதும் உடலளவிலும் மனதளவிலும் தயாராக இருப்பதன் மூலம் நாட்டின் இறையாண்மையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற வேண்டும் என்றார் அவர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.